# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 08 செவ்வாய்க்கிழமை (24-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:264


## அதிகாலை துறைமுகத்தினுள் ஊடுருவல்

# திருமலைக் கடற்படைத் தளம் மீது நேற்றுப் புலிகள் பெரும் தாக்குதல்!

## துருப்புக்காவி கப்பல் மூழ்கடிப்பு!! பீரங்கிப்படகு சேதம்!!!

திருகோணமலை,ஒக்டோபர்.24

திருகோணமலை துறைமுகத்துடன் அமைந்திருக்கும் கடற்படைத்தளம் மீது நேற்று அதிகாலை 6 மணி முதல் விடுதலைப்புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்தனர். இத் தாக்குதலின் போது துறைமுகத்துக்குள் ஊடுருவிய கடற்புலிகளின் நான்கு படகுகள் அடங்கிய அணியினர் நடத்திய உக்கிரமான தற்கொலைத் தாக்குதலில் கடற்படையினரின் துருப்புக்காவி கப்பல் ஒன்று முற்றாகத் தகர்க்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டதாக "றொய்ட்டர்" செய்தி நிறுவனம் தெரிவித்தது. அதிவேக டோறா பீரங்கிப்படகு ஒன்றும் சேதமடைந்தது.

துறைமுக வலயப்பகுதிக்குள் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே பல மணிநேரம் மோதல்கள் நீடித்தன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினருக்கு உதவி வழங்கிய எம்.ஐ.24 ரக ஹெலியை புலிகள் சுட்டு வீழ்த்தினர்!

திருகோணமலை,ஒக்.24

திருகோணமலை, கிண்ணியாவில் மாபிள் கடற்கரை, உப்பாறு பகுதிகளில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினருக்கு உதவி வழங்கிக் கொண்டிருந்த 'எம்.ஐ.24' ரக ஹெலி ஒன்று விடுதலைப்புலிகளின் தாக்குதலினால் தீப்பற்றி வீழ்ந்து நொறுங்கியது. அதிலிருந்த விமானப்படையினர் நால்வரும் காணாமல் போயுள்ளனர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் அந்தக் ஹெலி புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கங்கை உப்பாறுப் பகுதியில் உப்புக் கடலில் வீழ்ந்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அச்சமயம் ஹெலியில் இருந்த விமானியான விங் கொமாண்டர் ஜெகத் றொட்றிக்கோ,உதவி விமானியான டி.எல்.டி. வீரசேகர,கோப்ரல் சிறிவர்த்தன, சுடுகலன் இயக்குநரான விக்கிரமசிங்க ஆகியோர் என்னவானார்கள் என்பது தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஹெலியையும், அதிலிருந்தவர்களையும் மீட்பதற்காக அப்பகுதியில் தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாகப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களில் சிறிலங்கா விமானப்படை இழந்த இரண்டாவது ஹெலிக்கொப்ரர் இதுவாகும். இதே ரக ஹெலி ஒன்று கடந்த 19ஆம் திகதி நாகர்கோவில் பகுதியில் புலிகளின் தாக்குதலில் வீழ்ந்து நொறுங்கியது தெரிந்ததே. (ஐ-3-7-8)

## குண்டு வெடிப்புச் சத்தங்களால் திருமலை நகரம் அதிர்ந்தது!

திருகோணமலை,ஒக.24

திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் இடம்பெற்ற பெரும் தாக்குதல்களினால் திருமலை நகரப் பகுதியில் நேற்றுக் காலை பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

பெரும் குண்டு வெடிப்புச் சத்தங்கள் நகரை அதிர வைத்தன. கட்டடங்கள் அதிர்ந்தன. ஷெல் மற்றும் பீரங்கிக் குண்டுகளின் சிதறல்கள் நகரை அண்டிய குடியிருப்புகள் மீது வீழ்ந்தன. இதனால் மக்கள் பீதியடைந்தனர்.

மாபிள் கடற்கரை, நாச்சிக்குடா பகுதிகளில் தொடர்ந்து மோதல்கள் இடம்பெறுவதால் வெள்ளை மணல், நாச்சிக்குடா பகுதிகளில் இருந்து சுமார் 500 குடும்பங்கள் பாதுகாப்புத்தேடி இடம்பெயர்ந்துள்ளதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது. உப்பாறு சுற்றுப் பகுதிகளில் இருந்தும் 250 குடும்பங்கள் இடம் பெயர்ந்து ஆலயங்களில் தஞ்சமடைந்துள்ளன.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த இடங்களுக்கு திருகோணமலைப் பிரதேச செயலர் வி.வேலும்மயிலும் நேற்று நேரில் சென்று நிவாரணப் பணிகளை மேற் கொண்டார்.



## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி

குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணை யேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை என்றும் வழங்கக் கடமைப்பட்டுள்ளது. அந்தக் கடமைப்பாட்டை வெளிப்படுத்தும் விதத்தில்-

சகோதரப் பத்திரிகையாளர் நிமலராஜனின் ஆற்றல் மிக்க துணிச்சலான சமூகப் பணிக்கு நன்றிகூறும் வகையில் -

நமது சமூகத்தின் சார்பில் 'உதவி' நிதி ஒன்றைத் திரட்டி அவரது குடும்பத்துக்கு வழங்கும் முயற்சியை 'உதயன்' ஆரம்பித்துள்ளான்.

'உதயன்' நிர்வாகத்தின் சார்பிலும், 'உதயன்' செய்தியாளர்கள் மற்றும் பணியாளர்கள் சார்பிலும் 50,000 ரூபாவை முதலில் வழங்கி இந்நிதியை உதயன் ஆரம்பித்து வைக்கின்றான்.

தொடர்ந்தும் சமூக அமைப்புகள், பொது, தனியார் நிறுவனங்கள், அரச ஊழியர்கள், பிரமுகர்கள், கட்சிகள், பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள் என பல தரப்பிலிருந்தும் சகோதரப் பத்திரிகையாளன் நிமலராஜனின் பரியாதைக்குரிய துணிச்சலான பணியை மெச்சும் விதத்தில் நிதி உதவி வந்து குவியும் என எதிர்பார்க்கின்றோம்.

- உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படும்.
- காசோலை மூலமாக அனுப்புவோர் குறிப்பிட வேண்டிய கணக்கு இலக்கம் நாளைய உதயனில் அறிவிக்கப்படும்.
- நன்கொடை வழங்குவோரின் பெயர், விபரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் வழங்கப்பட்டு தொகை விபரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

*- நிர்வாக இயக்குநர் -*

## நால்வர் உயிரிழப்பு

வவுனியா,ஒக்.24

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்று கடற்படையின் அதிவேக டோறாப் படகுகளை இடைமறித்துத் தாக்குதல் நடத்திய சம்பவத்தில் தமது தரப்பில் நால்வர் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் 'புலிகளின் குரல்' வானொலி மூலம் நேற்றிரவு அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ மேஜர் தேவன் (சந்திரசேகரம் ஸ்ரீபவான் - யாழ்ப்பாணம்)

★ கப்டன் எல்லாளன் (இராசரட்ணம் இராஜ்குமார் - யாழ்ப்பாணம்)

★ 2ஆம் லெப்டினன் புலித்தேவன் (நடராஜாதிருச்செந்தூரன்-கிளிநொச்சி)

★ நிலாகரன்(பொன்ராசா ரஞ்சித்குமார் - மன்னார்)

தொடரும் 'ஓயாத அலைகள் - 4' நடவடிக்கையில் கலைக்கதிர் நடராஜா யோகராணி-யாழ்ப்பாணம்) என்பவரும் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

## நிமலின் கொலையைக் கண்டித்து தலைநகரில் நாளை பேரணிகள்

### சுதந்திர ஊடக அமைப்பு ஏற்பாடு

கொழும்பு,ஒக்.24

யாழ்ப்பாணத்தின் பிரபல பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலைக்கு அரசு பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டும் -

சகல தமிழ்க்கட்சிகளிடம் இருந்தும் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று கோரியும் - கொழும்பில் நாளை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று நடத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகர் ஆர்ப்பாட்டத்துக்கு 'உதயன்' பூரண பங்களிக்கும்

நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து யாழ்.பஸ் நிலையத்தின் முன்னால் அமைதி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் முடிவு செய்துள்ளது.

ஆர்ப்பாட்ட நாளன்று பத்திரிகைகளை வெளியிடாமல் ஊழியர்களை அதில் கலந்து கொள்ளுமாறும் பத்திரிகையாளர் சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

சகோதரப்பத்திரிகையாளன் நிமலராஜனின் படுகொலைக்குக் கண்ட

(10ஆம்பக்கம் பார்க்க)

## மாபிள் கடற்கரையில் மறைந்துள்ள புலிகளைப் பிடிக்க பெரும் தேடுதல்!

### அப்பகுதியில் நேற்றிரவும் மோதல் நீடிப்பு

திருகோணமலை,ஒக்.24

மாபிள் கடற்கரைப் பகுதி அடங்கிய கிண்ணியா தெற்குப் பகுதியில் பெரும்படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இராணுவத தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

இலங்கை வானொலி அதனை நேற்றிரவு அறிவித்தது.

திருகோணமலைத் துறைமுகப் பகுதிக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்திய பின் தப்பிச்சென்ற விடுதலைப்புலிகள் மறைந்திருப்பதாகக் கூறப்படும் மாபிள் கடற்கரைப்பகுதியை படையினர் சுற்றிவளைத்துள்ளனர். அப்பகுதியில் படையினருக்கும் புலிகளுக்கும்இடையே மோதல்கள் நேற்று இரவும் நீடித்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

துறைமுகப் பகுதிக்குள் தாக்குதல் ஆரம்பித்த உடனேயே மாபிள் கடற்கரைப்பகுதிக்கு விரைந்த படையினரின் மோட்டார் சைக்கிள் ரோந்

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மதத் தலைவர்களின் ஆதரவுடன் படைக்கு முழுமூச்சாக ஆள்சேர்ப்பு

கொழும்பு,ஒக்.24

இராணுவத்துக்கு மேலும் பத்தாயிரம் பேரைச் சேர்க்கும் நடவடிக்கை மதத்தலைவர்களின் ஆதரவுடன் முழுமூச்சாக மேற்கொள்ளப்படவிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்தார்.

ஆள் சேர்க்கும் பணி நேற்று ஆரம்பமாகியுள்ளது என்றும் -

இந்தப்பணி வழமைபோல் அன்றி இம்முறை குறிப்பிட்ட அளவு தொகையினரையாவது சேர்க்கும் நோக்கில் அடுத்த மாதம் 10ஆம் திகதி வரை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி மாணிக்கவாசகர் தர்ஷினி

விஞ்ஞான பீடத்து
விழுதுகளில் ஒன்றான தர்ஷினியே - எங்கள்
விழியோரம் நீர் சிந்த - எம்மை நீர்
விட்டகன்ற செய்தி பொய்யாகிப்
போகாதோ!
பல்கலைக்கழகமே உன் குடும்பமென்று
புல்லரித்துப் போயிருந்தோம்.
பாதியிலே போன உந்தன்
ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்க்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**4 ஆம் வருட விஞ்ஞான பீட மாணவர்கள்**

(79808)

## கண்ணீர் அஞ்சலி

**எமது பாசமிகு தோழனும் எமது கழகத்தின் வெளிமாவட்ட இணைப்பாளருமாகிய**

Rtr. பா.உமாகணேசன் அவர்களின் அன்புக்குரிய தாயார்

### திருமதி பாலையா கிருஸ்ணகுமாரி

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.நகர்மைய றோட்டரக்ட் கழகம், யாழ்ப்பாணம்.**

(C/13550)

## மரண அறிவித்தல்கள்

### அப்புத்துரை ஸ்ரீபன் (இராசரத்தினம்)

(மாநகராட்சிமன்ற வாகனப் பகுதி முன்னாள் முகாமி (FOR MEN)

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை ஸ்ரீபன் 22-10-2000 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை - றோசம்மா தம்பதிகளின் அருமை மகனும், மீராவின் அன்புக்கணவரும், லக்ஷ்மன், ராஜ்குமார்(கனடா), விஜிதா(கனடா),ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வரத்தினம் (செல்வா, பொருளாளர் யாழ்.பிராந்திய தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கம்) காலஞ்சென்ற ராசாத்தியம்மா, மனோன்மணி, ஞானம்மா(அழகு கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரனும் பேனாட் செல்வரத்தினம், பரிங்டன் செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் அன்ரன் றொபின்சன்(கனடா), அன்ரன் சாள்ஸ்(கனடா), அலன் கிறேஸ்(வசந்தி), அலன் றோஸ்(சீதா), அனுஸ்ரா (வேவி - ஆசிரியர் வவுனியா) காலம்சென்றவர்களான கனிஸ்ரா(தங்கம்), அன்ரன் நிக்சன், அன்ரன் ஜோன்ஸ்(கனடா), ஜோன்ஸ் ஸ்ரீபன்சன்(ஜேந்தன்-கனடா), ஜோன்ஸ்பரீனா(ஜெயந்தி-கனடா), ஜோன் லுசினா (ஜெயா-சுவீடன்), ஜேன்ஸ் நியஸ்(சுகந்தன்-லண்டன்), ஜோன்ஸ் கசில்டா (கனடா), ஜோன்ஸ் பரிடா(குட்டி-இந்தியா), ஜோன்ஸ் அலன் (குச்சா - இந்தியா) ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*18, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:-
**A.J. செல்வரத்தினம்.**
(செல்வா-அண்ணா)

(C/13551)

### திருமதி வேலுப்பிள்ளை பராசக்தி

உசனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை பராசக்தி ஞாயிற்றுக்கிழமை(22-10-2000) காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் செகதீஸ்வரன் (ஆனந்தன், கொழும்பு), திருமதி ஜெகதீஸ்வரி கனகரத்தினம் (பேபி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சறோஜினிதேவி (கொழும்பு), கனகரத்தினம்(அதிபர்,யாழ் குடமியன் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் துசித்தா, துசானி(கொழும்பு), கார்த்திகா (A/L 2001 உயிரியல் பிரிவு மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி), மதுராகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்,திருமதி பூரணம் நாகராஜா,பரமநாதன், காலஞ்சென்ற பத்மநாதன், திருமதி பரிமளம் கனகசுந்தரம்,பவளநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25-10-2000 புதன் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தற்காலிக முகவரி:
**மா.பவளநாதன்**
141,கோயில்வீதி,
யாழ்ப்பாணம்.

**தகவல்:**
**திருமதி ஜெகதீஸ்வரி**
கனகரத்தினம்(மகள்),
உசன், மிருசுவில்.

(79810)

# அனுமதியின்றி வன்னிக்குச் செல்ல படையினரின் பெற்றோர் முடிவு

கொழும்பு,ஒக்.24

விடுதலைப்புலிகளால தடுத்து வைக்கப்பட்டிருக்கும் படையினரை மீட்டு வருவதற்காக அங்கு செல்ல அரசு தொடர்ந்து அனுமதி மறுத்தால் படையினரின் உறவினர்களுடன் அடுத்த மாத முதல் வாரத்தில் அனுமதி இன்றி வன்னிக்குச் செல்ல முடிவு செய்துள்ளோம்.

காணாமற்போன படையினரின் பெற்றோர், உறவினர்கள் சங்கத் தலைவர் ஈ.பி.நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரண்டு சிரேஷ்ட அமைச்சர்களின் ஏற்பாட்டில் இவ்வார இறுதிக் குள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து இது விடயம் பற்றிப் பேசவிருக்கிறோம் என்றும்-

நீண்ட காலமாகப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தப் படையினரை மீட்டு வர இனியும் காலம் தாழ்த்தாமல் வன்னி செல்ல அனுமதிக்குமாறு இந்தச் சந்திப்பின் போது கோரவிருக்கிறோம் என்றும்-

அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-1)

## அலுவலகம் இடம்மாற்றம்

யாழ்.மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் அலுவலகம நேற்றையதினம் நல்லூர் முத்திரைச் சந்தைப் பகுதியிலுள்ள யாழ். கல்வி வலயத்தின் சுற்றுலா விடுதிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

யாழ்.கே.கே.எஸ். வீதியில் நாச்சிமார் கோயில் முன்பாக இயங்கி வந்த இவ்வலுவலகத்தின் தளபாடங்களும் மற்றும் அலுவலக உபகரணங்களும் லொறி மூலம் யாழ்.வலயக் கல்விப் பணிமனையின் சுற்றுலா விடுதிக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இந்த அலுவலகம் இனிமேல் இக்கட்டடத்திலேயே தொடர்ந்து இயங்க உள்ளது. (ஐ-51)

## உதைபந்தாட்டம்

நல்லூர் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்.இந்து மைதானத்தில இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் 16 வயதுக்கு உட்பட்ட பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துவும் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயமும் மோதுகின்றன. (ஐ-3)

## சாரணர் ஆண்டு விழா

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சாரணர் குழுவின் 84ஆவது ஆண்டு நிறைவு விழாவும், மலர் வெளியீடும் இன்று பிற்பகல் 1.30 மணியளவில் குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் வைத்திய கலாநிதி ஆ.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-3)

## ராஜா
**(யாழ்ப்பாணம்)**

**விஜய், ஜோதிகா, விஜயகுமார்** மற்றும் பலரின் நடிப்பில்

## குஷி

காட்சிகள்:
10.30, 2.00 (பு.நே.)

(C/13491)

## தவறிவிட்டது

**கோண்டாவில் மேற்கு உப்பு மடம் சந்தியில் வதியும் தானு - வாசுதேவக்குருக்களின் தேசிய அடையாள அட்டை (593642585V) விசேட அடையாள அட்டை (0908012874) மற்றும் மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், முக்கிய ஆவணங்கள் அடங்கியகைபை என்பன கலட்டி மாரியம்மன் கோயிலுக்கும், வண்ணை சிவன் வடக்கு வீதிக்கும் இடையில் கடந்த 22-10-2000 அன்று தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் கலட்டி மாரி அம்மன் கோயிலில் அல்லது மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.**

**தானு - வாசுதேவக்குருக்கள**

(79814)

## CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF JAFFNA

## VACANCY ADMINISTRATIVE OFFICER

Candidate should Possess Good Educational background and Working knowledge of English Experience In Typing and Accounts Would be a definite advantage. Please send your application to Managing Director, 14A, Annasathira lane, kandarmadam, Jaffna.

(79807)

***MANAGING DIRECTOR***

## கண்ணீரால் நனைந்து சென்ற

## 29 ஆம் நாள் வேதனைத் தாகம்

**தோற்றம்** 1962 - 02 - 18



**மறைவு** 2000 - 09 - 26

### திருமதி மகேந்திரராசா ரதி

திரைகடல் ஓடித் திரவியம் தேடச் சென்ற ரதியே! - நீங்கள்
ஆலடி ஞானவைரவரின் தொண்டினையும் விட்டு,
கணவர், தந்தை, சகோதரர்களையும் ஊரையும்
உற்றார், உறவினர்களையும் சடுதியில் துறந்ததேனோ?
குடும்பத்தின் தலைவியான எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் ஓடி மறைந்தாலும் காலம் உள்ளவரை
உம் நினைவுகள் யாவும் எம் கண்ணீரால் வளர்ந்திடுமே!

இன்று (24-10-2000) செவ்வாய்க்கிழமை பகல் 10.00 மணிக்கு நடை பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குளப்பிட்டி றோட்,*
*ஆலடி,*
*ஆனைக்கோட்டை.*

உங்கள் பிரிவால் துயருறும்
**கணவர், தந்தை, சகோதரி, மைத்துனன்.**

(79793)

## வாழ்த்தி வரவேற்கிறோம்

இன்று (24.10.2000) செவ்வாய்க்கிழமை மானிப்பாய் ஸ்ரீ முருகன் அருள்நிலைய ஆதரவில் பட்டமும் பாராட்டும் பெறும் எமது ஆலய தவில் கலைஞன்

**'தவில் இளவரசன்'**

### *N.R.* தர்ஷீலன்

மேலும் பல பதக்கங்களும் பட்டங்களும் பெற்று சிறந்த கலைஞனாகத் திகழ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் அருள்கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

**கண்ணகை அம்மன் தேவஸ்தானம் பரிபாலனசபையும், தொண்டர்சபையும், வட்டுக்கோட்டை.**

(79801)

## *வாழ்த்துகின்றோம்*

அண்மையில் நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டியவரும், வடக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு, அபிவிருத்தி அமைச்சரும், ஈ.பி.டி.பி தலைவருமான

### மாண்புமிகு K.N. டக்ளஸ் தேவானந்தா

அவர்களைப் பராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் அவரின் வெற்றிக்கும் கட்சியின் வெற்றிக்கும் அயராது உழைத்த மக்கள் சேவகன் ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவருமான

### திரு.ந.திரிலோகநாதன்

அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர்களுடைய சேவை மேலும் தொடர்ந்து மக்களுக்கு கிடைக்க எல்லாம் வல்ல பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தியையும், தொல்புரம் வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்பாளையும் பிரார்த்திப்போமாக!

**பண்ணாகம் இளைஞர்கள்.**

(79803)

# சம்பிரதாயங்களை மீறிய இந்திய நாட்டு ஜனாதிபதி



கே.ஆர்.நாராயணன்

புதுடில்லி,ஒக்.24

இந்தியாவில் அரசியல் சம்பிரதாயங்களை மீறி ஜனாதிபதி விமான நிலையத்துக்குச சென்று பிரதமரை வரவேற்றார்.

கடந்த இருவாரங்களின் முன்னர் முழங்காலில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையின் பின்னர் மும்பையில் இருந்து பிரதமர் வாஜ்பாய் நேற்று புதுடில்லி திரும்பினார்.

வாஜ்பாய் புதுடில்லி விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தபோது, ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் வந்திருந்து பிரதமரை வரவேற்றது பலரையும் ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியது.

அரசமைப்பு சம்பிரதாயங்களின்படி ஜனாதிபதி தனக்கு அடுத்த பதவிகளில் உள்ளவர்களை நேரில் சென்று வரவேற்பது கிடையாது. தற்போது இந்தச் சம்பிரதாயத்தை ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் புறக்கணித்துள்ளார்.

இவர் பதவியேற்ற சிறிது காலத்தில் இந்தியாவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது குடும்பத்தினருடன் வாக்குச் சாவடியில் வரிசையில் காத்திருந்து வாக்களித்துப் பரபரப்பை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

# இந்திய எல்லை நோக்கி பாகிஸ்தான் படை நகர்வு!

## 'டொன்' பத்திரிகை தகவல்

இந்திய எல்லையை நோக்கி பாகிஸ்தான் இராணுவம் முன்னேறி வருவதாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இருந்து வெளிவரும் 'டொன்' என்ற ஆங்கிலப் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் -

பாகிஸ்தானின் மராலா பகுதியில் இருந்து, இந்தியாவின குஜராத் மாநிலம் கட்ஜ் பிரதேசத்தை நோக்கி பாகிஸ்தானியப் படை கள் சிறிது சிறிதாக முன்னேறி வருவதாகவும் -


9 இராணுவப் பிரிவுகள் 9 நிலைகளில் முன்னேற்றத்தை மேற்கொள்வதாகவும் -

இப்பகுதியில் ராணுவ நடமாட்டம் வழக்கத்துக்கு மாறானது என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை குறித்து இராணுவத் தளபதியிடம் செய்தியாளர் கேட்டபோது இது வழக்கமான இராணுவ ஒத்திகை என்று பதிலளித்ததாக 'டொன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் கார்கில் பகுதியில் இராணுவ நடமாட்டம் அற்ற பனி மலைப் பிரதேசத்தில் பாகிஸ்தான் படைகள முன்னேறி ஆக்கிரமித்ததை அடுத்தே சில மாதங்களின் முன்னர் இரு நாடுகளிடையே யுத்தம் மூண்டது.

கட்ஜ் பகுதியிலும் தற்போது ஆள்கள் நடமாடமுடியாத காலநிலை நிலவுவதால் அங்கு இந்திய ராணுவம் கண்காணிப்பை வெகுவாகக் குறைத்துள்ளதாகவும் பாகிஸ்தானியப் படைகள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியிருக்கலாம் என்றும் இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஒ-8)



ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்குக் காரணமாக பல அழிவுகள் ஏற்பட்டுள்ளன. சுவிற்சர்லாந்தில் கிராமம் ஒன்றில் மழையினால் ஏற்பட்ட நிலச்சரிவைக் காட்டும் படம் இது.

# பிரிட்டனில் இந்துமதத் தலைவர் கொடூரமாகக் குத்திக் கொலை!

## சிறுபான்மையினர் மத்தியில் அச்சம்!!

லண்டன்,ஒக்.24

பிரிட்டனில் இந்துமதத தலைவர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து அங்கு வாழும் சிறுபான்மை சமூகங்களிடையே அச்ச உணர்வு பரவியுள்ளது.

லண்டனில் மத்திய பகுதியில் வசித்து வந்த பிரிட்டிஷ் இந்து சம்மேளனத்தின் தலைவரான 42 வயதுடைய ஹரேஷ் புரோகிதர் என்பவர் தனது வீட்டில் கொலைசெய்யப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்ததாக அவரது தந்தையும் இளைய மகனும் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்தனர்.

பிரேத பரிசோதனையில் கூரிய ஆயுதத்தால் பலமுறை குத்தப்பட்டு புரோகிதர் கொடூரமாகக் கொல்லப்பட்டிருப்பது தெரியவந்தது.

இந்தச் சம்பவத்தை அடுத்து சிறுபான்மை இன, மத சமூகத்தவர் மீதான தாக்குதல்கள குறித்த அச்சம் பிரிட்டனில் பரவியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-8)

## உடன்பாடு ஏற்பட்டபோதும்

# மேற்குக் கரை மோதல்களில் நேற்றும் 4 பலஸ்தீனர் பலி!

மேற்குக்கரை நகரான ரமலாவில் இஸ்ரேலியப் படையினருக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே நேற்று நடந்த வன்முறை மோதல்களில் 4 பலஸ்தீன வாலிபர்கள் உயிரிழந்தனர்.

கடந்தமாதம் 28ஆம் திகதி முதல் பலஸ்தீனப் பகுதிகளில் நிகழ்ந்துவரும் மோதல் சம்பவங்களில் இதுவரை 128பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் பெரும்பாலனோர் பலஸ்தீனர்கள்.

இந்த மோதல்களை நிறுத்த இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக் மற்றும் பலஸ்தீனத் தலைவர் அரபாத் ஆகியோரிடையே எகிப்தில் நடைபெற்ற மாநாட்டில் உடன்பாடு ஏற்பட்டபோதும், பலஸ்தீனர்கள் தொடர்ந்து இஸ்ரேலியப் படைகளுடன் மோதிவருவதாகக் கூறப்படுகிறது.

நேற்றுக் காஸாவில் மலைப்பகுதியில் வழிதவறிச் சென்ற இஸ்ரேலியப் படையினர், தம்மைத் தாக்க வருவதாக எண்ணிய பலஸ்தீனப் பொலீஸார் சுட்டதில் 6 இஸ்ரேலியர்கள் படுகாயமடைந்ததாகக் கூறப்படுகிறது. (ஒ-7)

# கழுதையை காக்கும் முயற்சியில் ஏற்பட்ட விபத்தில் 40 பேர் பலி!

இஸ்லாமாபாத்,ஒக்.24

கழுதை ஒன்றைக் காப்பாற்ற பேருந்து ஓட்டுனர் முயற்சித்ததால் ஏற்பட்ட விபத்தில் 40 பயணிகள் உயிரிழந்தனர். 75 பேர் படுகாயமடைந்தனர்.

பாகிஸ்தானின் பஞ்சாப மாகாணத்தில் மீகான் நகரம் அருகே இந்த விபத்து இடம்பெற்றது.

வேகமாகச் சென்றுகொண்டிருந்த விரைவுப் பேருந்தை, வீதியில் திடீரென்று குறுக்கிட்ட கழுதை ஒன்றைக் காப்பாற்றுவதற்காக ஓட்டுனர் திசைமாற்றியபோது எதிர்ப்புறத்திலிருந்து வந்துகொண்டிருந்த மற்றொரு பேருந்துடன் மோதியதில் விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் இரு பேருந்துகளிலும் பயணம் செய்தவர்களில் 40பேர் உயிரிழந்ததாகவும் -

75 பயணிகள் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் -

பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-8)

## எதிர்க்கட்சியினர் நடத்தும்

# வேலைநிறுத்தப் போராட்டத்தால் சிட்டகொங் துறைமுகம் ஸ்தம்பிதம்!

டாக்கா,ஒக்.24

பங்களாதேஷின் சிட்டகொங் துறைமுகம் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிப் பொருளாதாரத்தின் 80 சதவீதத்தைக் கையாளும் சிட்டகொங் துறைமுகத்தில் எதிர்க்கட்சித் தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டதை அடுத்து வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

முன்னாள் பிரதமர் பேகம் கலீதா ஜியாவின் தேசியவாதக் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர் சட்டத்தை மீறிய குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஆனால் இந்தக் கைது அரசியல் பழிவாங்கல் என்று எதிர்க் கட்சிகள் கூறிவருகின்றன.

வேலை நிறுத்தப் போராட்டத்தினால் பங்களாதேஷ் பெரும் பொருளாதார இழப்பைச் சந்திக்க நேரிடும் எனக் கருதப்படுகிறது. (ஒ-7)

## வடகொரியா அரசுக்கு அறிவுறுத்தல்

வாஷிங்ரன்,ஒக்.24

வடகொரியா உலகத்துடன் ஒத்துழைத்தால், அது நல்ல எதிர்காலத்தைத் தரும் என்று அந்நாட்டிற்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலர் மெடலின் அல்பிரைட் அறிவுறுத்தியுள்ளார்.

அமெரிக்க நிர்வாக அமைச்சர் ஒருவர் வடகொரியா சென்றிருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## உலக அரங்கில்

## ஆர்ஜென்டீனா விமான விபத்தில் 11 பேர் பலி!

ஆர்ஜென்டினாவில் சாகச நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருந்த இரு சிறிய ரக விமானங்கள் வானில் மோதி விபத்துக்குள்ளானதில் விமானங்களில் இருந்த 11 பேரும் உயிரிழந்தனர்.

வருடந்தோறும் ஆர்ஜென்டினாவில் கொண்டாடப்பட்டுவரும் விவசாய தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற கொண்டாட்டங்களில் ஒரு பகுதியாக நடந்த விமான சாகசக் கண்காட்சியின் போதே இவ் விபத்து நடந்துள்ளது. (ஒ-7)

## அசாமில் தீவிரவாதிகள் சுட்டு 15 பேர் பலி!

புதுடில்லி,ஒக்.24

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் சிறுவன் உட்பட 15 பேரைத் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர்.

அசாம் மாநிலத் தலைநகரின் முக்கிய சந்தைப்பகுதியில் உள்ள கடை ஒன்றில், அசாம் ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த தீவிரவாதிகள் கப்பம் கேட்டதாகவும் -

கடை உரிமையாளர் கப்பம் கொடுக்க மறுத்ததாகவும் -

இதனால் ஆத்திரமுற்ற தீவிரவாதிகள் வர்த்தகரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, அப்பகுதியில் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 3 வயதுச் சிறுவன் உட்பட 14 பேர் கொல்லப்பட்டதாகவும் அசாம் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஒ)

## நெடுமாறனுக்கு திரையுலகினர் நன்றி தெரிவிப்பு

சென்னை,ஒக்.24

நடிகர் ராஜ்குமாரின் விடுதலைக்காக சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனிடம் தூது சென்று திரும்பிய தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் உள்ளிட்ட குழுவினருக்கு கன்னட எழுத்தாளர்கள் மற்றும் திரை உலகினர் சென்னையில் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள். (ஒ-8)

# கேரளாவில் விஷச்சாராயம் அருந்திய 24பேர் இறந்தனர்!

திருவனந்தபுரம்,ஒக்.24

இந்தியாவின் கேரள மாநிலம் கோலம் மாவட்டத்தில் கள்ளச் சாராயம் அருந்திய 24பேர் உயிரிழந்தனர். 120பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கள்ளச் சாராயம் அருந்தியவர்களில் கல்லுவர் என்ற ஊரில் 15 பேரும் கோட்டக்கல் என்ற ஊரில் 9 பேரும் இறந்துள்ளனர். சம்பந்தப்பட்ட இரு இடங்களிலும் விற்கப்பட்ட சாராயத்தைச் சட்ட விரோதமாகத் தயாரித்தவரும் அவரது மனைவியும் தலைமறைவாகி விட்டதாகவும் -

அவர்களைத் தேடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாகத் தயாரிக்கப்படும் சாராயத்தில் அதிக போதை கிடைப்பதற்காக பற்றரிகள், பொட்டாசியம் போன்ற நச்சு இரசாயனங்கள் ஆகியவை பயன்படுத்தப்படுவதாகவும், இவற்றின் அளவு அதிகமானதே உயிரிழப்புகளுக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. (ஒ-8)

# தீவிரவாதிகளின் பேரணி மீது பாகிஸ்தானில் குண்டு வீச்சு!

பாகிஸ்தானில் காஷ்மீர்த் தீவிரவாதிகளின் பேரணியின்மீது கைக்குண்டு வீசப்பட்டதில் இருவர் கொல்லப்பட்டனர். 18 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இந்திய அரசை எதிர்த்து காஷ்மீரில் பிரிவினை கோரிப் போராடி வரும் லஸ்கர் - இ -தொய்பா என்ற தீவிரவாத அமைப்பினர் தமது போராட்டத்தை வலியுறுத்தி பேரணி நடத்தினர்.

அப் பேரணி மீது கைக்குண்டு ஒன்று வீசப்பட்டதில் உயிர்ச்சேதங்கள ஏற்பட்டதாகவும் -

இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் -

இஸ்லாமாபாத் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் நடைபெற்ற பல வன்முறைத தாக்குதல்களுக்கும், சமீபத்தில் தென்மாநிலங்களில் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் மீது நடத்தப்பட்ட குண்டு வெடிப்புகளுக்கும் லஸ்கா - இ - தொய்பா அமைப்பே காரணம் என்று இந்தியா குற்றஞ்சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

# கோவாவில் 18 மாதங்களில் 3ஆவது முறை காங்கிரஸ் பிளவு!

புதுடில்லி,ஒக்.24

இந்தியாவின் கோவா யூனியன் பிரதேச சட்டசபையில் ஒன்றரை வருடங்களில் மூன்றாவது முறையாக காங்கிரஸ் உறுப்பினர்களிடையே பிளவு ஏற்பட்டுள்ளது.

கோவா சட்டசபையின் பத்து காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களில் 5பேர் ஷேக் ஹஷன் தலைமையில் தாம் பா.ஜ.கவுக்கு ஆதரவு தரத் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளனர்.

கோவாவில் பா.ஜ.க. ஆதரவுடன் கோவா மக்கள் காங்கிரஸ் அரசு நடைபெறுகிறது. காங்கிரஸ் கட்சியின் 5 உறுப்பினர்கள் ஆதரவு அளிக்கும் நிலையில் தற்போதைய அரசைக் கவிழ்த்துவிட்டு முதல் தடவையாக பா.ஜ.க. கோவாவில் அரசமைக்கும் என்று கருதப்படுகிறது.

வெளிநாடு சென்றிருந்த கோவா முதலமைச்சர் பிரான்சிஸ் ஷபினா உடனடியாக நாடு திரும்பி ஆளுநரைச் சந்தித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

# மலிவு விற்பனை

வர்த்தக உலகிற்கோர் வைர ஏணி
மலிவு விற்பனை முறையிலோர் புதிய பாணி

வாடிக்கையாளரின் நலன் கருதி விஷேட விலையில் வண்ணத் துணி வகைகளை எண்ணம் போல் தெரிவு செய்ய ஏற்றதொரு எழில்கூடம்:

## நியூ சண்முகானந்தா ரெக்ஸ்

23 (58), பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 3356

(79787)


யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்

# பரிசளிப்பு விழா

இன்று (24-10-2000) செவ்வாய்க்கிழமை
காலை 9 மணி

தலைவர்
அதிபர் திரு. எஸ். சண்முககுமார் SLPS
SC.Trd, B.A, Dip.In Edu.

பிரதம விருந்தினர்
பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ்
B.A (Cey) Ph.d (Edin burg)
பீடாதிபதி - பட்டப்படிப்புக்கள் பீடம் -
யாழ். பல்கலைக்கழகம்

**5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 142 புள்ளி பெற்ற மாணவனுக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படுகிறது.**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– வித்தியாலயக் குடும்பத்தினர்.

(79788)

# அறிவித்தல்

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

கைதடி தெற்கு, கைதடியைச் சேர்ந்த சரவணமுத்து மார்க்கண்டுவின் மரணசாதனம் விட்டிறந்த மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக

காலஞ்சென்றவர்

செல்லப்பா முத்துக்குமாரசுவாமி,
இல. 3, கந்தபுராண வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

– மனுதாரர்

வழ. இல. தத்துவம்/3915

எதிர்

1. கந்தபிள்ளை சதாசிவம்
2. பெண் சரஸ்வதி
   இருவரும் பிரான்பற்று, பண்டத்தரிப்பு.
3. நவரட்ணராஜா இராஜேஸ்வரி
4. நவரட்ணராஜா பவளராணி
5. நவரட்ணராஜா சண்முகராஜா
6. நவரட்ணராஜா இந்திரராணி
   இவர்கள் பராயமற்றவர்கள். தங்கள் வழக்கு பாதுகாவலர் 7 ஆம் எதிர்மனுதாரர் மூலம்
7. திருமதி சிவபாக்கியம் நவரட்ணராஜா
   எல்லோரும் சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு
8. கார்த்திகேசு கனகசபையும்
9. பெண் பொன்னரியம்
   இருவரும் சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு
10. வைரமுத்து செல்லத்துரை
11. பெண் சிவபாக்கியம்
    இருவரும் பொந்தி ஒழுங்கை, பண்டத்தரிப்பு

– எதிர் மனுதாரர்கள்

மேலே விபரிக்கப்பட்ட இறந்தவரான ஆளின் மரணச்சொத்துத் தொடர்பில் மரண சாதனத்தை எண்பிப்பதற்காகவும், மரணசாதன அதிகாரப் பத்திரம் பெறுவதற்காகவும் விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. எனவே மரணசாதனம் எண்பிக்கப்பட்டதென வெளிப்படுத்தி மரணசாதன அதிகாரப் பத்திரம் வழங்கலுக்கான கட்டளையொன்று ஆக்கப்படுவதற்கு ஆட்சேபனை உடைய ஆளெவரும் 2000 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் (சத்தியக் கடதாசியின் ஆதாரத்துடன்) அத்தகைய ஆட்சேபனையை எழுத்தில் சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி
2000 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 19 ஆம் திகதி

து. சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைவு:
ச. இளங்கோவன்
மனுதாரின் சட்டத்தரணி

(79790)

# செயலமர்வு இடம் மாற்றம்

தென்மராட்சி ஒக். 24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி தரம் 1, தரம் 2 ஆசிரியர்களுக்கு வடமராட்சி சதாபொன்ஸ் கல்வி நிலையத்தில் நடத்தப்படவிருந்த விசேட கணித பாட செயலமர்வுகள் நாளை முதல் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

# பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 24

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த கிராம சேவை உத்தியோகத்தர் ஒருவரும், இளைஞர் ஒருவரும் மல்லாகம் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

புத்தூர் மேற்கு கிராம சேவை உத்தியோகத்தரான நாகலிங்கம் மதனசேகர் (வயது 44) என்பவர் 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 30 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் –

மானிப்பாயைச் சேர்ந்த பசுபதி கலகரத்தினம் (வயது 24) என்பவர் ஆள்ப் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த 19 ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் பா. சுப்பிரமணியம் முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டனர்.

(ஐ-5)

# செய்முறைப் பரீட்சை

தென்மராட்சி, ஒக். 24

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், கொடிகாமம் அரசினர் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான சங்கீதம், மனைப் பொருளியல், விவசாயம் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் நாளை புதன்கிழமை வதிரி பிகோன் கல்வி நிலையத்தில் நடைபெறுமென அதிபர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-117)

★ ★ ★

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தில் ஜி. சீ. ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான சங்கீத பாட செய்முறைப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறுமென அதிபர் திருமதி ம. குமாரகுலசிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-117)

# சாரணர் பாசறை விழா

யாழ்ப்பாணம், ஒக். 24

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்க வருடாந்த சாரணர் பாசறை விழாவும் குருளைச் சாரணர் வெளிக்கள நாள் நிகழ்வுகளும் எதிர்வரும் 27 ஆம் திகதி மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

போஜன் தலைமையில் ஆரம்பமாகும் மேற்படி விழா 29 ஆம் திகதி மாலை 4 மணி வரை நடைபெறும். இந்த நிகழ்வில் மாணவர்களின் விசேட கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

மேற்படி நிகழ்வினை 28 ஆம் திகதி மாலை 2 மணி முதல் 6 மணி வரையும் 29 ஆம் திகதி காலை 10 மணி முதல் 12 மணி வரையும் பொது மக்கள் பார்வையிட அனுமதிக்கப்படுவர்.

இந்த பாசறை நிகழ்வுகளில் வெற்றிபெறும் சாரணியர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (இ-ரி)

# நன்றி கூறுகின்றோம்

யாழ். அரச மரக்கூட்டுத்தாபனத்தில் கடமை புரியும் ஏழு ஊழியர்களாகிய எங்களை அனுராதபுரத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட வேளையில்

**வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர்**
**திரு. ந. திரிலோகநாதன்** அவர்கள்
கௌரவ **கே.என். டக்ளஸ் தேவானந்தா**

உடன் தொடர்பு கொண்டு எமது இடமாற்றத்தை ரத்துச் செய்து தந்தமைக்காக இவர்களுக்கும் இவர்களுடன் சேர்ந்து ஒத்துழைத்த கட்சியைச் சேர்ந்த எல்லோருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரச மரக்கூட்டுத்தாபன ஊழியர்கள்

சி. நடராசா — சி. வித்தியாகுமார்
மு. கந்தசாமி — செ. லூக்காஸ்
நா. பரமசிவம் — த. தேவராசா
க. ஜெகதாசன்

(79798) யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

**செல்வி குணசிங்கம் யோகானந்தி**
அவர்களின் தந்தையார்

## பொன்னுத்துரை குணசிங்கம்

அவர்கள் 20 - 10 - 2000 அன்று காலமானதையிட்டு மனம் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

நலன்புரிச் சங்கம்,
யாழ். பிரதேச செயலகம். (79797)

# மரண அறிவித்தல்கள்

## பிள்ளையார் செல்லையா

வேலணையைச் சேர்ந்த பிள்ளையார் செல்லையா நேற்று (23—10—2000) காலமானார்.

அன்னார் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகவடிவு (அதிபர், புங்குடுதீவு கணேச வித்தியாலயம்), கு. சிவராசா, சிவரட்ணம் (அதிபர், கம்பளை), பாஸ்கரன் (லண்டன்), அம்பிகாவதி (கொழும்பு), திலகவதி (வவுனியா), கமலாவதி (இந்தியா), லீலாவதி (யாழ். போதனா வைத்தியசாலை), விமலாவதி ஆகியோரின் தகப்பனாரும், கலா, தயா (கனடா), தேவன் (பிரான்ஸ்), சசி, நியூட்டன் (லண்டன்), நளினி, யசோ, யுகே (இந்தியா) ஆகியோரின் பேரனும், இராசம்மா, காலஞ்சென்ற சண்முகம் (வைத்தியர்), காலஞ்சென்ற சிவபாக்கியம், கந்தையா (டிப்போ அதிபர்), செல்வராசா, சின்னராசா (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் வேலணை மயானத்தில் இன்று 24—10—2000 நண்பகல் 12 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(மகன்) சிவராசா
வேலணை. (சி/13548) (மகள்) லீலாவதி

## வைரவிப்பிள்ளை கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

ஓய்வுபெற்ற பெருந்தெருக்கள் திணைக்கள பிரதம லிகிதரும் பரந்தன் கணேசாமில், மாயவன்ஸ் உரிமையாளருமாகிய வை. க. சுப்பிரமணியம் அவர்கள் 22.10.2000 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பார்வதிப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சின்னத்துரை-செல்லம்மா ஆகியோரின் மருமகனும், தெய்வநாயகியின் அன்புக் கணவரும், அன்பழகன் (M Sc பொறியியலாளர், கனடா), மதிவதனி (அமெரிக்கா), மதியழகன் (பொறியியலாளர், கனடா), வேலழகன் (பொறியியலாளர் அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை, கிருஷ்ணபிள்ளை (கணேசா ஸ்ரோர்ஸ், பரந்தன்), சரஸ்வதி, செல்லம்மா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற கந்தையா (கணேசா ஸ்ரோர்ஸ், பரந்தன்), சரஸ்வதி சபாரட்ணம், கணேசராசா, இராசையா, சிவமயம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மேகலா (கனடா), தேவராசா (பொறியியலாளர்-அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அருண் (கனடா), மதுரா, மயூரா, மயூரன், கிருஷ்ணன், நளினா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், யோகாம்பிகை, சிவகுமாரி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (25-10-2000) புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரம், மைத்துனர்கள்.

கோணர் வளவு, புலோலி தெற்கு,
புலோலி. T. P. 070- 212578 (79796)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ் வரணி
ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2000

செல்வி
**நீரஜா குஹநாதசர்மா**
**154 புள்ளி**

பரீட்சை இறுதிவரை ஊக்கத்துடன் செயற்பட்ட வகுப்பாசிரியர் திரு சி. ஸ்ரீகோபாலகிருஷ்ணன் அவர்களையும் சகல ஒத்துழைப்புகளையும் நல்கிய அதிபரையும் உப அதிபரையும் ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டி எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

– பெற்றோர்.

(79781)

## 73 ஆவது ஜெயந்தி தின விழா
## 24 - 10 - 2000



ஸ்ரீ முருகன் ஆத்மீக
**அருள் மார்க்கண்டு சுவாமிகள்**

73 ஆவது ஜெயந்தி தின விழாவான இன்று 24 - 10 - 2000 சுவாமிகளின் அருளும் ஆசியும் பெற்றிருக்கும் முருகன் அடியார்கள் வெகு சிறப்பாக மானிப்பாய் ஸ்ரீ முருகன் அருள் நிலையத்தில் 73 ஆவது ஜெயந்தி தினத்தைக் கொண்டாடுகின்றார்கள்.

– முருகன் அடியார்கள்

மானிப்பாய். (79416)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 | 24 |
| — | — |
| 12 | 09 |
| — | — |
| 1942 | 2000 |

### அமரர் நாகலிங்கம் துரைராஜா

கல்விக்கென்றே ஏணியானீர்கள்—எமை
கண்ணீர்க் கடலில் ஆழ்த்திடவோ?
கற்கும் வழி நீண்டிருக்க—கணத்தினில்
கண் மூடியதேனோ?
''யாவும் செய்திட வேண்டும்''
— எனும் வாய்மொழியும்
''எதுவும் தெரிந்திட வேண்டும்''
— எனும் அறிவுரையும்
யாவும் உங்கள் இழப்பினிலும்
— எமக்கு வழிகாட்டும்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

தெட்டிலிப்பாய்,
கோண்டாவில். (79774)

## உறவினரிடம் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24
அரச செலவில் அடக்கம் செய்யும்படி நீதிபதியால் உத்தரவிடப்பட்ட சடலம் மீண்டும் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

கோப்பாய்ப் பகுதியிலுள்ள கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டு யாழ். போதனாவைத்தியசாலையில் கடந்த 21 ஆம் திகதி கோப்பாய்ப் பொலீஸாரினால் ஒப்படைக்கப்பட்ட சந்திரன் சித்திரா (வயது 32) என்பவரின் சடலமே உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எவருமற்ற நிலையில் பொலீஸாரினால் ஒப்படைக்கப்பட்ட இந்தச் சடலம் தொடர்பான விசாரணையை மேற்கொண்ட யாழ். நீதிமன்ற நீதிபதி சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்யும்படி உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவுக்கிணங்க அடக்கம் செய்யும் நடவடிக்கைகளை ஆஸ்பத்திரி நிர்வாகம் மேற்கொண்டிருந்தது. அவ்வேளை அங்கு சென்ற உறவினர்கள் சடலத்தைப் பொறுப்பேற்கும் உத்தரவை நீதிபதியிடமிருந்து பெற்று சடலத்தை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

(இ-15)

## உதவிப்பணம்

கோப்பாய், ஒக். 24
கோப்பாய் பிரதேச செயலகர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் தமது ஒக்ரோபர் மாதத்துக்குரிய கொடுப்பனவுகளை இன்று செவ்வாய் தொடக்கம் தமது தபாற்கந்தோர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்— என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே மாதத்துக்குரிய புற்றுநோய், தொழுநோய், காசநோய் போன்றவற்றுக்கான கொடுப்பனவுகள் ஏற்கனவே தபாலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(இ-72)

## மோட்டார் சைக்கிளிலிருந்து விழுந்து காயம்

யாழ்ப்பாணம், ஒக். 24
ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் பின்னாலிருந்து விழுந்து பெண் ஒருவர் காயமடைந்தார்.

யாழ். முற்றவெளி, கண்டி வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குருநகரில் இருந்து இடம்பெயர்ந்து, ஆனைக்கோட்டையில் வசிக்கும் பிரான்ஸிஸ் மேரி மற்றில்டா (வயது 39) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## முறைப்பாடுகளில் சாதனை

கொழும்பு, ஒக். 24
முறைப்பாடுகளைப் பொறுத்தவரை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் சாதனை படைத்துள்ளது.

இதுவரை காலம் இடம்பெற்ற தேர்தல்களில் கிடைத்த முறைப்பாடுகளிலும் பார்க்கக் கூடுதலான முறைப்பாடுகள் இந்தத் தேர்தலில் கிடைத்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

மொத்தம் 2 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும்—

தேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் இருந்து தேர்தல் இடம்பெற்ற தினம் வரை மட்டும் ஆயிரத்து 710 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
**செல்வன் யோகநாதன் மதனதீபனையும்**

இவருக்கு கல்வி ஊட்டிய நெல்லியடி மெதடிஸ் தமிஷன் பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் நெல்லியடி MATHS CENTER கல்விமான்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

செல்வி புனிதகுமாரீ-சுப்பிரமணியம்
(அக்கா)

சரசாலை வடக்கு,
சரசாலை. (79785)

## மரண அறிவித்தல்கள்

### முத்துவேலு வைத்தீஸ்வரன்

சாவகச்சேரி கோயில் குடியிருப்பைப் பிறப்பிடமாகக்கொண்ட முத்துவேலு வைத்தீஸ்வரன் 20-10-2000 வெள்ளிக்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற முத்துவேலு-பார்வதி தம்பதியினரின் அன்பு மகனும், தெய்வானையின் அன்புக் கணவரும், புங்குடுதீவு ஆறுமுகம் – பொன்னாச்சி தம்பதியினரின் மருமகனும், தியாகராசா, சிவசோதி, காலஞ் சென்றவர்களான முத்துக்குமாரசாமி, சிவக்கொழுந்து, இலக்குமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவசீலன் (சுவிஸ்), உதயசீலன் (கனடா), தமயந்தி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேதீஸ்வரன் (சுவிஸ்), சிவமதி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 25-10-2000 புதன்கிழமை கொழும்பு 14, தொடர்மாடி 3/6, இல்லத்தில் (T.P 075—330611) நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
மு. தியாகராசா (சகோதரன்),
க. சிவசோதி (சகோதரி)

''சிவநடனபதி''
சிவன் கோயிலடி,
வட்டு. வடக்கு, வட்டுக்கோட்டை. (79782)

### திருமதி செல்லத்துரை ஜெயலட்சுமி

ஏழாலை மேற்கைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை ஜெயலட்சுமி 23—10—2000 திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ் சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவபாதம், காலஞ்சென்ற சிவபாக்கியம் (கமலா), லீலாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், பூமணி, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, பொன்சபாதி (ஓய்வு பெற்ற கல்விப்பணிப் பாளர், கிளிநொச்சி) ஆகியோரின் மாமியாரும், யசோதை (சுவிஸ்), கோசலை (ஆசிரியை—இராமநாதன் கல்லூரி), கெங்காதரன் (ஜேர்மன்), துவாரகை, சகுந்தலை (ஜேர்மன்), கிருபாகரன், பிரபாகரன் (பிரான்ஸ்), கிஷ்ணவேணி (நோர்வே), இரகுநாதன் (பிரான்ஸ்), நாவேந்தன் (கொழும்பு), வேல்மாறன் (களஞ்சியப் பொறுப்பாளர் — உணவுக் கட்டுப்பாட்டுக் கிளை. செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மயூரி, பிரவின், கஸ்தூரி, றஞ்சினி, தர்சினி, சாளுகா, நூறன், கர்ன்யா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-10-2000) செவ்வாய்க்கிழமை 11. 00 மணியளவில் ஏழாலையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக ஏழாலை மேற்கு உசத்தியோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. வேல்மாறன் (பேரன்)
களஞ்சியப் பொறுப்பாளர்,
உணவுக் கட்டுப்பாட்டு கிளை
செயலகம், யாழ்ப்பாணம்.

''துளசி'',
ஏழாலை மேற்கு, ஏழாலை. (79791)

### நாகலிங்கம் ஆனந்தராஜா
( ஆனந் சுவிஸ் )

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த நாகலிங்கம் ஆனந்தராஜா 21 - 10 - 2000 அன்று சுவிஸில் காலமானார்.

அன்னார் நாகலிங்கம் – பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், தேவராஜா யோகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், சுதாமினியின் அன்புக் கணவரும், அருந்தவராஜா (சுவிஸ்), புலேந்திரராஜா (ஜேர்மனி), திருமதி ரஞ்சினி (கனடா), மோகனராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வனஜா (சுவிஸ்), சுகந்தி (ஜேர்மனி), ரவீந்திரன் (கனடா), ஜசிதா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், திருமதி சுதர்சினி, சுதர்சன் (ஜேர்மனி), சுபாஸ்கரன், சுஜிபன் ஆகியோரின் அருமை அத்தானும், கிருஷ்ணதாசனின் (அப்பன்) சகலனும், புஜின், புவிந், கிசாந், ஆகியோரின் சித்தப்பாவும் அரவிந்தின் அருமை மாமாவும், தனோஜா, டினோஜா, விதுனன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
அப்பன் (சகலன்)

பருத்தித்துறை வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (79748)

## வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி சோமசுந்தரம் நல்லம்மா

மலர்வு 12-08-1926 உதிர்வு 26-09-2000

எப்பொழுதும் எங்களுக்காய் எறித்த முழுநிலவை
காணாது கண்ணீர் வடிக்கின்றோம்.
பாசத்துக் கிளியாளை நீ பறித்து விட்டாலும்,
வாசல் பார்த்தவளின் வரவிற்காய் காத்திருப்போம்.
மீண்டும் ஒரு முறை எம் நிலவு முகம் காண்பதற்கு
வேண்டும் வரம் தந்தருளும் விநாயகரை
நித்தமும் வேண்டுகின்றோம்.

எமது குடும்ப விளக்கு திருமதி சோமசுந்தரம் நல்லம்மா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்கள், இறுதிச் சடங்கில் நேரடியாக பங்கு கொண்டு அனுதாபங்கள் தெரிவித்தவர்கள், தந்தி, கடிதம், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியவர்கள், தொடர்ந்தும் சமுகம் கொடுத்து ஆறுதல் வார்த்தைகள் கூறிய வண்ணம் உள்ள உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் கண்ணீர் கலந்த நன்றிகள்.

இன்று (24 — 10 — 2000) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சோ மகாலிங்கம்
(விமலா களஞ்சியம் உரிமையாளர்)
மற்றும் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

31/1, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (79736)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தில்
06 - 10 - 2000 அன்று B. Sc. பட்டம் பெற்ற
எமது அன்புச் சகோதரி

### செல்வி துரைஜயா ஜெயந்தினி

அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்.

து. பிறேமச்சந்திரன்
குடும்பத்தினர்.

கமலா ஸ்ரோர்ஸ்,
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை. (79719)



## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் துரைஜயா பாலச்சந்திரன்

(கமலா ஸ்ரோர்ஸ்)

தோற்றம் 12 — 07 — 1959 மறைவு 19 — 10 — 1987

திதி: 24 — 10 — 2000

ஊக்கத்துடன் உயர்வு தந்து
எம்மை ஆளாக்கிய அண்ணாவே!
ஆண்டுகள் பல ஆனாலும்
காலங்கள் பல விரைந்தோடினாலும்
துன்பங்கள் எம்மைச் சூழ்ந்தாலும்
உங்கள் அன்பு மட்டும்
என்றும் எமக்குள் நிலைத்திருக்கும்.

குடும்பத்தினர்

சந்திரபவனம்,
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

கமலா ஸ்ரோர்ஸ்,
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
(79718)



## நினைவில் நீங்காத இதய மலர்கள்

முதலாம் ஆண்டு மூன்றாம் ஆண்டு





### அமரர் சின்னையா மாசிலாமணி

மலர்வு 19 - 03 - 1937 உதிர்வு 04 - 11 - 1999

### திருமதி அருந்தவதேவி மாசிலாமணி

மலர்வு 09 - 03 - 1942 உதிர்வு 24 - 10 - 1997

திதி: 24—10—2000

உங்கள் இருவரினதும் பாதாரவிந்தங்களுக்கும்
இதய மலர்களைத் தூவி தினம் தினம் பூசிக்கின்றேன்.

அன்பு மகன் மா. சிவகுமார் (சிவா)

S.M.S. தொலைத் தொடர்பகம்,
சுடலைப்புலம், சுன்னாகம்.
Tel No: 070 - 212192 (79734)


## சைவநெறி தேர்வு

நீர்வேலி காமாட்சியம்பாள் இந்துபரிபாலனசபையினரால் வருடாந்தம் நடத்தப்படும் சைவநெறித் தேர்வு அடுத்த மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக பரீட்சைச் செயலாளர் த. ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார். (இ—7)

## தண்ணீர்த் தொட்டி

பருத்தித்துறை நகர சபை எல்லையில் குடிதண்ணீர் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் வடமராட்சிப் பகுதியில் 127 இடங்களில் தண்ணீர்த் தொட்டிகளை அமைக்க பருத்தித்துறை நகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. (இ — 109)

## உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு கணனிகள்

யாழ். உயர்தொழில் நுட்ப நிறுவனத்துக்கு புதிதாக 5 கணனிகளை வழங்குவதற்கு உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் ரி. ஏ. பியசிறி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கணனியில் போதுமான பயிற்சிகளை வழங்குவதற்குகணனிகள் பற்றாக்குறையாக இருப்பதாக உயர் தொழில் நுட்பநிலைய இயக்குநர் ரி இராஜரட்ணம் பணிப்பாளர் நாயகத்திற்கு தெரிவித்ததை அடுத்தே புதிதாக கணனிகள் வழங்கப்பட உள்ளன.

இதேவேளை மேற்படி கணனிகள் தமக்குக் கிடைத்ததும் மாணவர்களுக்கு போதியளவு செய்முறைப் பயிற்சி வழங்கப்படும் என்று இயக்குநர் தெரிவித்தார். (இ-ரி-10)

## கலாசார உத்தியோகத்தர் செயலமர்வு

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் ஐந்து தினங்களுக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரனின் பணிப்பின்பேரில் யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பிரதேச செயலர்கள் உட்பட பல பிரமுகர்கள் இந்தச் செயலமர்வில் கருத்துரை வழங்கவுள்ளனர்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த கலாசார உத்தியோகத்தர்ளுக்கு கடந்த வருடம் திருகோணமலையில் செயலமர்வு நடத்தப்பட்டமை தெரிந்ததே. (இ — 7)


## தூரிகை
### நுண்கலை வளாகம்

★ சங்கீதம் ★ நடனம்
★ சித்திரம் ★ மிருதங்கம்
★ வயலின் ★ வீணை

வகுப்புகள்
25-10-2000 (புதன்)
பி. ப. 3.00 மணிக்கு
ஆரம்பமாகின்றன.

செங்குந்தா வீதி,
கல்வியங்காடு
(79780)

# உதயன்

## மட்டக்களப்பிலும் மனித புதைகுழி

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உட்பட தமிழர்கள் வாழும் மாவட்டங்கள் — தமிழர் பிரதேசங்கள்— இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர், பல வளங்களாலும் செல்வந்த பூமிகளாக விளங்கின. ஒவ்வொன்றும் ஒருவகையால் பொருளாதாரச் சிறப்புடையதாக விளங்கியது.

ஆனால் 1980 ஆம் ஆண்டின் பின்னர் அந்த நிலை மாறியது. கொழும்பு அரசாரின் அடக்குமுறை காரணமாக தமிழர் பிரதேசம் ஒட்டு மொத்தமாக பல வகைகளாலும் சிதைவுறத் தொடங்கின காலப்போக்கில்செல்வந்த பூமி என்று கூறுவதற்குப் பதிலாக ''ஷெல்வந்த'' பூமி என்று தமிழர் மண்ணைக் கூற வேண்டியதாயிற்று.

வருடங்கள் செல்லச்செல்ல— கடந்து போக — ''ஷெல் வந்த'' பூமி என்பதோடு ''புதைகுழிப் பூமி'' யாகவும் தமிழர் மாவட்டங்கள் மாற்றப்பட்டன. தமிழ்ப் பிரதேசங்களில் அங்கே கைது, இங்கே காணாமற் போதல், வீதிகளில் சூட்டுக்காயங்களுடனா சடலங்கள் என்ற செய்திகள் அடிக்கடி வெளிவரத் தொடங்கின.

இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த காலத்திலும் மேற்கூறிய சம்பவங்கள் அதிகரித்திருந்தன.

இயக்க மோதல்கள் காரணமாகவும் தமிழ் இளைஞர் யுவதிகளின் உயிர்கள் வீணாகக் சாவு செய்யப்பட்டதை மறந்து விடுவதற்கில்லை.

போர் தீவிரமடைந்ததும் சந்தேகத்தின் பேரில் கைது என்ற அடைமொழியுடன், காரணம் தெரிவிக்கப்படாமல் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டனர். அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றின் உதவியுடன் தமிழ் இளஞ்சந்ததியினர் கொல்லப்பட்டு வீதிகளில் வீசப்பட்டனர்; அல்லது புதைகுழிகளில் போடப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பெரும் மனித புதைகுழிப் பிரதேசமாக மாறியுள்ளமை இரண்டு வருடங்களுக்கு முன்னர் அம்பலத்துக்கு வந்தது. இலங்கை அரச படைகளின் தமிழர் விரோதத்துக்கு ஓர் உதாரணமாக செம்மணி விளங்குகிறது.

அத்தகைய ஒரு சூழ்நிலையில், மட்டக்களப்பும் மனித புதைகுழிப் பிரதேசமாக மாற்றப்பட்டிருக்கும் என்பதற்கான ஆரம்ப அறிகுறி தென்பட்டுள்ளது. ஆரையம்பதிக் கிராமத்தில் பதின்மூன்று எலும்புக் கூடுகள் கிடந்த புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. வீதி ஓரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புதைகுழிக்குள் பெண்களின் உடைகள் காணப்பட்டமை மேலும் விசனத்தைத் தருவதாகும். யாழ்ப்பாணம் மட்டுமன்றி, மட்டக்களப்பு மட்டுமன்றி தமிழர் பிரதேசம் முழுவதுமே புதைகுழி மண்ணாக மாற்றப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

தமிழர் பிரதேசங்களில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள், கொலைகள், கற்பழிப்புகள், சித்திரவதைகள் போர் முடியும் வரை தொடரும் என்று இலகுவாக ஊகிக்கலாம். இவற்றை அரசு தடுக்கும், தவிர்க்கும் என்பதற்கான நம்பிக்கை தமிழ் மக்களுக்கு பிறக்கத்தக்கதாக அரசின் செயற்பாடு ஒரு துளிதானும் இல்லையே!

மேலே கூறப்பட்டவை சம்பந்தமாக விசாரணை, சட்ட நடவடிக்கைஎன்பதெல்லாம் வெறும் கண்துடைப்புகளாக முடிந்திருப்பதே அதற்குக் காரணமாகும். மட்டக்களப்புப் புதைகுழி விவகாரமும் அவ்வாறே மூடப்பட்டுவிடலாம்.

# கூட்டரசில் இணைவதன் மூலம் தீர்வை ஈ.பி.டி.பி. வலியுறுத்தும்

## டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

கூட்டரசாங்கம் ஒன்றை நிறுவ ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி தமிழ்ப் பேசும் மக்களுக்குரிய அரசியல் தீர்வை ஈட்டுவதற்கான அழுத்தத்தை செலுத்த முடியும் என்று ஈ.பி.டி.பி நம்புகிறது.

ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

மக்கள் எமக்களித்த அனுசரணையான ஆதரவுக்கு ஏற்ப ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிட்டியுள்ளது. நீண்ட காலத்திற்குப் பின்னர் வடக்கு—கிழக்கு தமிழ்ப் பேசும் மக்களின் நாளாந்த வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்த அரசியல் கட்சி ஒன்று ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்க முன் வந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும்

எனினும் ஈ. பி. டி. பியின ராகிய நாங்கள் அரசியல் பொது வாழ்வில் ஈடுபடமுன் வந்த பொழுது நாடாளுமன்ற ஆசனங்கள் பற்றிய கனவுகளோ, அமைச்சுப் பதவிகள் குறித்த கற்பனைகளோ வைத்திருக்கவில்லை. பொழுது போக்கு எண்ணங்களுடனோ, பக்க வருமானம் தரும் துறைகளை நாடியோ, அல்லது பெருமை கருதியோ அரசியல் வாழ்வில் நாம் அடியெடுத்து வைக்கவில்லை.

கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்க நீண்ட காலத்திற்குப் பின் ஏற்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி தமிழ்ப் பேசும் மக்களுக்குரிய அரசியல் தீர்வை ஈட்டுவதற்கான அழுத்தத்தைச்செலுத்த முடியுமெனக் கருதுகிறோம். ஆதலால், ஆட்சி அமைப்பின் கூட்டுப் பொறுப்பில் பங்கேற்கும் அதே சமயம், தொடரும் அழிவுகளிலிருந்து எமது மக்கள் விடுபட அக்கறை காட்டுவோம் என்பதை இத்தருணத்தில் உறுதிபட எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

தமிழ்ப் பேசும் மக்கள் முன்பாக தற்போது மூன்றே மூன்று தெரிவுகளே உள்ளன. உணவு முதல் தேவைகள் அனைத்தையும் மூர்க்கத்தனமான போரின் மூலமாக நிலை நாட்டும் போக்கு முதலாவது. இவ்வழி தமிழ்ப் பேசும் மக்களை அழிவுப் பாதையிலேயே கொண்டு செல்கின்றது என நாங்கள் கருதுகின்றோம்.

இரண்டாவது நடைமுறைக்குச் சாத்தியமான அணுகு முறைக்கு ஊடாக அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதில் முனைப்பைக் காட்டும் போக்காகும். தென் ஆபிரிக்கா, பலஸ்தீனம், வட அயர்லாந்து போன்ற பல்வேறு நாடுகளினதும் முன் மாதிரியாகக் காணப்படும் போக்கு இது. இயலுமான அளவுக்கு அபிவிருத்தி ஊடாக ஆக்கத்தை வெளிப்படுத்தும் வாய்ப்பும் இப் போக்கில் உண்டு.

மூன்றாவது எந்தவித அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தாமல் நழுவிச் செல்லும் சுயலாப நோக்குடனான அரசியல் போக்கு. ஆயுதப்போரின் முகவர்கள் போலத் தம்மை இனங்காட்டி, எந்தவித ஆக்கபூர்வமான சமூகப் பங்களிப்பையும் வழங்க மறுக்கும் கபடர்களின் போக்கே இது.

நடைமுறைக்குச் சாத்தியமான அரசியல் தீர்வை இயலுமான விரைவில் நிலைநாட்டுவதற்கான முயற்சிகளை நாங்கள் தொடர்ந்தும் முன்னெடுப்போம். இம் முயற்சிகள் பூரணமான வெற்றியைத் தருவதற்குத் தமிழ்ப்பேசும் மக்கள் அனைவரும் தமது முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமென இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தரம்-1 ஏ, பி பாடசாலைகள் எண்ணிக்கை அதிகரிக்கும்

கொழும்பு, ஒக். 24

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தரம் ஒன்று ஏ, பி பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது சுமார் அறுநூறு பாடசாலைகளே இந்தத் தரத்திற்குள் அடக்குகின்றன என்றும் இவற்றின் எண்ணிக்கையைக் குறைந்தது ஆயிரமாக உயர்த்துவதற்குக் கல்வி அமைச்சு நடவடிக்கைஎடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் உயர்தரப் பாடசாலைகளில் அனுமதி பெறுவதில் உள்ள நெருக்கடிகள் குறைக்கப்படும் எனவும் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் விஞ்ஞான, வர்த்தக, கலைத்துறைகளில் கல்வி கற்பதற்கு மாணவர்களுக்கு வசதி வாய்ப்புகள் அதிகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் முதற் கட்டமாகப் பல பாடசாலைகளில் ஆய்வுகூட வசதிகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இதேவேளை மேற்படி திட்டத்தின் மூலம் ஒவ்வொரு பிரதேச செயலாளர் மட்டத்திலும் ஒவ்வொரு பாடசாலையைத் தெரிவு செய்து அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜெயந் தெரிவித்தார். (இ-ரி)

## இறந்தோர் விவரம் பதிவு

தென்மராட்சி, ஒக். 24

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் அண்மையவன் செயல்களின் போது பலியான மற்றும் ஊனமுற்றவர்களின் விவரங்கள் பிரதேச செயலகத்தினால் சேகரிக்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்டவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

# அமைச்சர்களுக்கு தனி அறை வழங்குவதில் சிக்கல்!

## 44 பேருக்கு 32 அறைகளே உள்ளன

கொழும்பு, ஒக். 23

புதிதாகப் பதவி ஏற்றுள்ள அமைச்சர்களுக்கு நாடாளுமன்றக் கட்டடத்தில் தனி அறைகள் வழங்குவதில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய அமைச்சரவையில் 44பேர் இடம்பெற்றுள்ளனர். ஒவ்வொரு அமைச்சருக்கும் நாடாளுமன்றத்தில் தனித்தனி அறைகள் ஒதுக்கப்படுவது வழக்கம் ஆகும்.

நாடாளுமன்றத்தில்32 அறைகளே உள்ளன. இதன் காரணமாக அமைச்சர்களுக்குத் தனித்தனி அறை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது உள்ள 32 அறைகளிலும் 4 அறைகள் வேறு பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (இ-3-20)

## நாளை

ஐப்பசி 9

**புதன்கிழமை**

திதி: திரயோதசி பிற்பகல் 3.44 வரை.

நட்சத்திரம்: உத்தரம் முற்பகல்: 8.25 வரை.

சுபநேரம்: 4.33—6.03

ராகுகாலம்: 12.03—1.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

குற்றமற்ற மனச்சான்றால் எந்தத் துன்பத்தையும் தாங்கிக் கொள்ள இயலும் குற்றமற்ற மனச்சான்று ஒரு நல்ல தலையணையாகும்.

- பிரான்ஸ்

## ஐ. நா. தின நிகழ்வுகள்

தென்மராட்சி, ஒக். 24

ஐக்கிய நாடுகள் தினத்தையிட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயத்தில் இன்று சிறப்பு நிகழ்வினை நடத்தவுள்ளதாகக் கழகத் தலைவர் லயன் கா. சற்குணதேவன் தெரிவித்தார். (ஐ-117)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக் 24

யாழ் மத்திய கல்லூரியில் சமூகக் கல்வி மன்றம் ஏற்பாடு செய்துள்ள ஐக்கிய நாடுகள் தின நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரித் தம்பர் மண்டபத்தில் மன்றத் தலைவர் அ. றஜீவன் தலைமையில் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் எஸ். இக்னேசியஸ், திவக வலய ஆசிரிய ஆலோசகர் எஸ். கணபதி ஆகியோர் சிறப்புரையாற்றுவர் (ஐ-3)

## தபாலகம் இயங்குகிறது

தென்மராட்சி, ஒக் 24

மிருசுவில் உப அஞ்சல் அலுவலகம் கடந்த வாரம் முதல் கரவெட்டி அரசடி சோனப்பு வீதியில் உள்ள பேக்கரிக்கு அருகில் இயங்குகிறது. மிருசுவில் விநியோக எல்லைப் பகுதிக்குப்பட்ட மக்கள் தமது கடிதங்களை தற்காலிக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாமென உப அஞ்சல் அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-117)

# குடும்ப அட்டை பெற்ற பின்பே மீன்பிடிக்கச் செல்ல அனுமதி

குருநகர், ஒக். 24

குடாக்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களின் குடும்ப விவர அட்டைகளின் புகைப்படப் பிரதிகளைப் பெற்ற பின்னரே மீனவர்கள் நேற்றைய தினம் குடாக் கடலுக்கு மீன்பிடிக்கச்செல்ல அனுமதிக்கப்பட்டதாகக் குருநகர் மீன்பிடிச் சங்கங்கள் தெரிவித்தன.

குருநகர் இறங்குதுறையில் படையினர் குடும்ப விவர அட்டைகளின் புகைப்படப் பிரதியைப் பெற்றபின்னரே மீனவர்கள் கடலுக்குச் செல்ல அனுமதித்தனர். (ஐ-51-17)

# 7 சந்தேகநபர்கள் நேற்று விடுதலை

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பின் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட ஏழு சந்தேக நபர்கள் யாழ். நீதிமன்றினால் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

சட்டமா அதிபரின் உத்தரவின் கீழ் யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர். ரி. விக்னராஜா மேற்படி சந்தேகநபர்களை விடுதலை செய்தார்.

விடுவிக்கப்பட்ட சந்தேக நபர்களின் விவரம் வருமாறு:

கொன்சன்ரைன் ராஜ்குமார் (குருநகர், யாழ்ப்பாணம்), பெரியான் நவரத்தினராசா (புன்னாலைக்கட்டுவன் தெற்கு), தெய்வேந்திரம் நிர்மலவேணி (திருநெல்வேலி) ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி தியாகராசா, தியாகராசா கமலாதேவி, தியாகராசா சதானந்தன், தியாகராசா ராஜிகா (சீனிவாசம் வீதி, கொட்டடி). (ஐ-5)

# நிவாரணம் வழங்குவதற்காக மீனவர்களின் விவரம் பதிவு

குடாக்கடலில் ஏற்பட்ட தொழில்தடை காரணமாக வருமானத்தை இழந்த குருநகர் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பதிவு வேலைகள் யாழ். பிரதேச செயலக ஊழியர்களினால் நேற்றைய தினம் குருநகர் சனசமூக நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டன.

குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்களினால் வழங்கப்பட்ட மீனவர்களின் பெயர்களின்படி யாழ். பிரதேச செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட உறுதிச் சிட்டைகளில் மீனவர்கள் தமது குடும்ப அட்டைகள் சகிதம் இப் பதிவுகளை மேற்கொண்டனர்.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் நேற்றுபூரணமாக முடிவடையவில்லையெனவும் தொடர்ந்து இரண்டு மூன்று நாள்களுக்கு இப்பணி நடைபெறும் எனவும் மீனவர் சங்கங்கள் தெரிவித்தன. (ஐ-51)

## குளவி கொட்டி மரணம்

பனை மரத்திலிருந்து வீழ்ந்த ஓலையை எடுத்த வயோதிபப் பெண் அதற்குள்ளிருந்த குளவிகள் கொட்டியதில் மரணமானார். இச் சம்பவம் நேற்று முன்தினம் திக்கம் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தியாகராசன் இரத்தினம் (வயது 65) என்பவரே மரணமானவராவார். (ஐ-117)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

MINI Hi-Fi 3-CD SONY SET JAPAN MODEL-MHC-W 55 நஷனல் டெக் N.V.7500 விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: 213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P-2863, 3327. (79756)

நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப்பெட்டி. இனம் சிசில் R-80 விற்பனைக்குண்டு. தொடர்பு: No.42, மருதடி வீதி, யாழ்ப்பாணம். (79732)

## தவறிவிட்டது

22-10-2000 அன்று அராலிச் சந்திக்கும், வங்களாவடி வேலணைக்குமிடையில் மோட்டார் சைக்கிளின் பின்பக்க சில்லைக் கழற்றிச் சென்ற சமயம் அதன் பிறேக் டயல் செற் (Preak Dial Set) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வேலணைக் கோட்டக் கல்விப்பணிமனையில் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். (79769)

திருமதி பொன்னையா இலட்சுமிப்பிள்ளை வயது 70 என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.308110087V)யும் விசேட அடையாள அட்டையும் அரசடி வீதிக்கும், 172ஆவது இலக்க வீட்டடிற்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஸ்ரான்லி வீதி, 104A, றூபா நிறுவனத்திடம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (79770)

சிதம்பரநாதர் திருநந்தகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.743600584V), விசேட அடையாள அட்டை (இல.091035002) மற்றும் முக்கிய ஆவணமும் கரணவாய்க்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நெல்லியடி மொடேன் ஸ்ரோரில் ஒப்படைத்து உதவவும். (79794)

## ஆடு விற்பனைக்கு

1½ வயது நிரம்பிய ஜமுனாபாறி கிடாய் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: K.நடராசா, 53 (179), பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (சாமளி அச்சகத்திற்கு அருகில் உள்ள ஒழுங்கை) (79772)


கொழும்பு விலையில்
23,24,25 திகதி வரை
KITO
319.90
பெற்றுக்கொள்ள
கணபதி சூ சென்ரர்
இல.69A, நவீன சந்தை,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.
(79760)


## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 32, உயர்தரம் 5'6", A/L வரை கல்வி கற்ற, ஜேர்மனியில் தொழில் புரியும், விரும்பத்தக்க தோற்றமுடைய மணமகனுக்கு நற்பண்புள்ள மணமகள் தேவை. வெளிநாட்டில் வசிக்கும் மணமகள் விரும்பத்தக்கது. தொடர்பு:- விளம்பர இல. 1124, மே/பா உதயன். (79768)

## உயிரிழந்த 6 பேர் விவரம்

வவுனியா,ஒக்.23

பல்வேறு சம்பவங்களில் தமது தரப்பில் உயிரிழந்த ஆறு பேரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் அறிவித்துள்ளனர்.

அவர்கள் பற்றிய விவரம் வருமாறு:-

★ ரதி (கணபதிப்பிள்ளை மாலா - மன்னார்)

★ கருங்குழலி (பாபு சாந்தினி - முல்லைத்தீவு)

★ மைவிழி (முத்துலிங்கம் கோமதி - யாழ்ப்பாணம்)

★ நற்குணலி (கனகசபாபதி சாந்தகுமாரி - வவுனியா)

★ மேஜர் ஆதவன் (முத்துசாமி சிவகணேசன் - யாழ்ப்பாணம்)

★ இந்துமதி (மல்லிகை ராசா சுபேதா - மாங்குளம்) (இ-7-21)

## மார்க்கண்டு சுவாமிகளின் ஜெயந்திவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.24

மானிப்பாய் ஸ்ரீ முருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகளின் 73ஆவது ஜெயந்தி தின விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி முதல் சுவாமிகளின் இல்லத்தில் நடைபெறும்.

ஞான சிரோன்மணி அம்மாவால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இந்த விழாவில் சுவாமிகளுக்கு பாதபூஜை நடைபெற்று தொடர்ந்து திருவிளக்குப்பூசையும் என்.ஆர்.தர்ஷிலன், கலாபூஷணம் எஸ்.நடராஜா ஆகியோருக்கு பட்டமளித்தலும் இடம்பெறும்.

தொடர்ந்து இராஜயோகன், சிவகுரு, க.சிவசுப்பிரமணியம், ம.சீவரத்தினம், க.இராஜேஸ்வரன், திருமதி இராமலிங்கம் இராஜேஸ்வரி ஆகியோரின் சொற்பொழிவும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (இ-8)

## பனம் விதை நடுகை

பனம் விதை நடும் திட்டதின் கீழ் பனை அபிவிருத்திச் சபையினால் இன்று செவ்வாய்க்கிழமை காக்கைதீவுக் குடியேற்றத் திட்டச் சுற்றாடலிலும் மயானப் பகுதியிலும் 4000 பனை விதைகள் நடத்தப்படஉள்ளன. இதேவேளை அண்மையில் கல்லுண்டாய்ப் பகுதியில் பனை அபிவிருத்தி சபையினால் 5000 பனம் விதைகள் நடப்பட்டது என்று பனை அபிவிருத்திச்சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஜ-135)

# தமிழ் அரசியல் பிரமுகரை தாக்க தற்கொலைக் குண்டு

## புறக்கோட்டையில் மறைத்து வைப்பு

கொழும்பு,ஒக்.24

கொழும்பு புறக்கோட்டையில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தற்கொலைக் குண்டு பிரபல தமிழ் அரசியல்வாதி ஒருவரை - நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்துவதற்கே மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். இது பற்றிக் கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பதாவது:-

அரசாங்கப் பிரமுகர்களை கொலை செய்வதற்கென விடுதலைப் புலிகள் மிகச் சமீபத்தில் எடைகூடிய ஆறு தற்கொலைக் குண்டுகளை கொழும்பு நகருக்கு அனுப்பி இருப்பதாகப் பொலீஸாருக்குத் தகவல் கிடைத்திருந்தது.

ஆறு தற்கொலைக் குண்டுகளில் பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் இரண்டு குண்டுகள் சில தினங்களுக்கு முன்னர் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன. இவற்றில் ஒன்று கொழும்பு புறக்கோட்டையில் உள்ள காஸ் வேக்ஸ் வீதியிலும் மற்றையது புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த முந்தலிலும் கண்டுபிடிக்கப்பட்டன.

புறக்கோட்டையில் வைக்கப்பட்டிருந்த தற்கொலைக் குண்டே பிரபல தமிழ் அரசியல்வாதி ஒருவரை - நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை இலக்குவைத்துத் தாக்குதல் நடத்துவதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது கொழும்புக்குக் கொண்டுவரப்படும் தற்கொலைக் குண்டுகள் ஆறு கிலோ எடையுள்ளவை என்றும் கண்டறியப்பட்டுள்ளது. அண்மையில் நகர மண்டபத்தடியிலும் கண் ஆஸ்பத்திரி அடியிலும் வெடிக்க வைக்கப்பட்ட குண்டுகள் ஆறு கிலோ எடையுடையவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தற்கொலைக் குண்டுகள் மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெரிய போரதீவு ஆகிய இடங்களிலிருந்தே கொண்டு வரப்படுவதாகவும் பொலீஸார் கண்டறிந்துள்ளனர்.

அநேகமாக இவை தொலைக் காட்சிப் பெட்டிகளுக்குள் வைத்து அவற்றைத் திருத்துவதற்காகக் கொண்டு வரப்படுவதாகக் கூறி கடத்தப்படுவதாகவும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-ரி)

## செயல்முறை பரீட்சை

மட்டுவில் கமலாசினி வித்தியாலய மனையியல் செயல்முறைப் பரீட்சை இன்று செவ்வாய்க்கிழமையும், சங்கீத செயல்முறைப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமையும் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் காலை 9 மணிக்கு நடைபெறும் என, மேற்படி வித்தியாலய அதிபர் செ.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விவசாய செயல்முறையில் பங்குபற்றாதோர், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் உள்ள விவசாய ஆசிரியரை சந்திக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடம் பெயர்வின் போது விட்டுச் சென்ற மதுபானம்

## படையினரால் உரியவரிடம் ஒப்படைப்பு

சாவகச்சேரி நகரில் உள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட சுமார் 3லட்சம் ரூபா பெறுமதியான மதுபான வகைகளைப் படையினர் கடை உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளனர் என யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகம் விடுத்த செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சாவகச்சேரிப்பகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கை காரணமாக அந்தப் பகுதி வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தமது கடைகளைப் பூட்டிவிட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்திருந்தனர்.

இவ்வாறு இடம் பெயர்ந்தவர்களில் சாவகச்சேரி நகரத்தில் மதுபான விற்பனை நிலையம் ஒன்றை நடத் தும் கந்தையா சுப்பிரமணியம் என்பவரும் ஒருவர்.

ஆனால் சாவகச்சேரிப் பிரதேசத்தை இலங்கை இராணுவத்தினர் மீண்டும் கைப்பற்றிய பின்னர் சுமார் ஒரு மாத காலத்திற்குப் பின்பு கடந்த 16ஆம் திகதி மேற்படி கடை உரிமையாளர் தமது மதுபான விற்பனை நிலையத்தைப் பார்வையிட வந்த போது அந்தப் பகுதிக்கான கட்டளை அதிகாரி லெப்ரினன்ட் கேணல் கொட்டகும்புர தன்னால் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 3லட்சம் ரூபா பெறுமதியான மதுபான வகைகளை அன்றையதினமே உரிமையாளரிடம் கையளித்தார்.

இதேவேளை:-

52ஆவது படையணியின் கட்டளை அதிகாரியினால் சாவகச்சேரிப் பகுதியில் கைவிடப்பட்டு வந்த வர்த்தக நிலையங்கள், அரச திணைக்களங்கள் மற்றும் குடியிருப்புக்களின் உரிமையாளர்கள் பார்வையிடவும் பொருள்களை எடுத்து வரவும் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இரவு நேரத் தேடுதல் கொழும்பில் அதிகரிப்பு

கொழும்பு,ஒக்.24

கொழும்பு நகரில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதை அடுத்து நகரில் இரவு நேரத் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன என்று கொழும்பு மாவட்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் போதி லியனகே தெரிவித்துள்ளார்.

கடந்த பத்து மாதங்களில் 13 தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன என்றும் - இவற்றில் அரைவாசிக்கு மேற்பட்ட தாக்குதல்கள் இலக்கை எட்டவில்லையென்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

கடைசியாக இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் தொடர்பாக பத்துப் பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் என்றும் -

கொழும்பு நகருக்குள் 47 தற்கொலைக் குண்டுதாரிகள் ஊடுருவியுள்ளனர் என்றும் - அவர்களைக் கைதுசெய்வதற்காக தேடுதல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் - பொலீஸார் கூறினர். (இ-3-8)

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருடம் ஐப்பசித் திங்கள் 9ஆம் நாள் நாளை (25.10.2000) புதன்கிழமை காலை 10.00 மணி முதல் 11.30 மணிவரையுள்ள சுபவேளையில்

| எமது புத்திரன் | | எமது புத்திரி |
|---|---|---|
| திருநிறை செல்வன் |  | திருநிறை செல்வி |
| ஜெலாகனுக்கும் | | தர்ஷினிக்கும் |

நவாலி வடக்கு இருதயர் ஆண்டவர் ஆலயத்தில் திருமணம் நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

திரு.திருமதி
செல்வநாயகம் தம்பதிகள்
உரும்பிராய்.

திரு.திருமதி
க.திருநாவுக்கரசு தம்பதிகள்
(திவோஸ் பாபு தச்சுத் தொழிலகம்)
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(C/13546)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 11 - 06 - 1919 |  | 25 - 09 - 2000 |

அமரர்

## குட்டிப்பிள்ளை சந்திரசேகரம்பிள்ளை

25-09-2000 அன்று சிவபதமடைந்த அன்னாரின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறி எமது துன்பத்தில் பங்கு கொண்டோருக்கும், பல்வேறு வகைகளில் உதவி புரிந்தவர்களுக்கும், எமது இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (25-10-2000) புதன்கிழமை நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்கு கொள்வதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ச.செல்வச்சந்திரன் (மகன்)
பண்டகை,
உடுப்பிட்டி.

- குடும்பத்தினர்.

(79758)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.24

குடாநாட்டிலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 21ஆம் திகதி வரை) பதிவிலக்கங்கள் பிரதேச ரீதியாக வருமாறு:-

### சங்கானை

| | |
|---|---|
| 513/165592/A | 513/165586/A |
| 513/165586/B | 513/152022/A |
| 513/152022/B | 513/164208/A |
| 513/164208/B | 513/161912/A |
| 513/155229/A | 513/165540/A |
| 513/165565/A | 513/164190/A |
| 513/164190/B | 513/164190/C |
| 513/164190/D | 513/160569/A |
| 513/164021/A | 513/164265/A |
| 513/164266/A | 513/161535/D |
| 513/158931/A | 513/160790/A |
| 513/158931/B | 513/160790/B |
| 513/157758/B | 513/157758/A |
| 513/15540/C | 513/15540/B |
| 513/15540/A | 513/158931/C |
| 513/161959/C | 513/164380/A |
| 513/160789/A | 513/161959/D |
| 513/161959/B | 513/161959/A |
| 513/161959/E | 513/165893/B |
| 513/165763/A | 513/165763/B |
| 513/164260/A | 513/164260/B |
| 513/165659/A | 513/165776/A |
| 513/165912/A | 513/165702/A |
| 513/165659/B | 513/165591/A |
| 513/130591/A | 513/165494/A |
| 513/161713/A | 513/161713/B |
| 513/161713/C | 513/165594/A |
| 513/164301/A | 513/164301/B |
| 513/164301/C | 513/164301/D |
| 513/164301/E | 513/165740/A |
| 513/165740/B | 513/163900/A |
| 513/163914/A | 513/163914/B |
| 513/160679/A | 513/160679/B |
| 513/160679/C | 513/163915/A |
| 513/138539/A | 513/165622/A |
| 513/165622/B | 513/165622/C |
| 513/165622/D | 513/165512/A |
| 513/165817/A | 513/165817/B |
| 513/166850/A | 513/165584/A |
| 513/165584/B | 513/166853/B |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 512/163219/A | 512/163438/B |
| 512/163566/B | 512/163612/A |
| 512/163629/A | 512/163629/B |
| 511/140922/A | 512/165955/A |
| 512/165940/A | 512/165940/B |
| 512/156517/A | 512/148081/A |
| 512/161432/A | 512/156517/B |
| 512/156517/C | 512/159290/A |
| 512/159290/B | 512/161284/A |
| 512/161340/A | 512/161340/B |
| 512/161340/C | 512/161340/D |
| 512/166199/B | 512/166119/A |
| 512/166120/A | 512/166120/B |
| 512/166128/A | 512/166128/B |
| 512/166190/A | 512/166190/B |
| 512/166090/B | 512/166199/A |
| 512/166090/A | 512/166199/C |
| 12/166199/D | 512/166200/A |
| 512/166200/B | 512/166200/C |
| 512/166200/E | 512/166203/A |
| 512/166245/A | 512/166245/B |
| 512/166245/C | 512/166190/C |
| 512/166036/A | 512/165967/A |
| 512/165967/B | 512/166019/A |
| 512/166020/A | 512/166020/B |
| 512/166020/C | 512/166020/D |
| 512/166302/A | 512/166036/B |
| 512/166036/C | 512/166036/D |
| 512/16604/A | 512/16604/B |
| 512/166048/A | 512/166061/A |

### கோப்பாய்

| | |
|---|---|
| 511/163719/A | 511/163719/B |
| 511/162946/A | 511/162946/B |
| 511/162973/A | 511/162973/B |
| 511/162753/A | 511/157212/A |
| 511/157212/B | 511/162974/A |
| 511/162974/B | 511/159635/A |
| 511/159635/B | 511/159635/C |
| 511/159635/D | 511/163771/A |
| 511/163770/A | 511/163770/B |
| 511/163770/C | 511/162757/A |
| 511/162757/B | 511/162798/A |
| 511/162798/B | 511/162950/A |
| 511/162950/B | 511/162912/A |
| 511/162912/B | 511/162912/C |
| 511/162912/D | 511/162799/A |
| 511/162799/B | 511/162799/C |
| 511/162891/A | 511/162914/A |
| 511/162914/B | 511/162914/C |
| 511/162914/D | 511/162892/A |
| 511/162892/B | 511/154445/A |
| 511/162818/A | 511/162818/B |
| 511/162818/C | 511/162818/D |
| 511/163791/A | 511/163791/B |
| 511/163791/C | 511/163791/D |
| 511/163791/E | 511/163791/F |
| 511/154313/A | 511/154313/B |
| 511/154313/C | 511/154313/D |
| 511/162784/A | 511/162784/B |
| 511/162784/C | 511/157354/A |
| 511/157354/B | 511/162916/A |
| 511/162916/B | 511/162916/C |
| 511/159604/A | 511/159604/B |
| 511/159604/C | 511/159604/D |
| 511/159604/E | 512/165942/A |
| 512/165942/B | 512/166033/A |
| 512/166033/B | 512/166033/D |
| 512/166033/C | |

### நல்லூர்

| | |
|---|---|
| 513/165772/A | 513/165772/B |
| 513/165772/C | 513/165772/D |
| 512/163605/C | 513/165780/A |
| 512/163160/C | 512/163160/D |
| 512/163438/A | 512/163566/A |
| 512/161373/C | 512/163605/B |
| 512/161373/B | 512/163631/A |
| 512/163631/B | 512/163631/C |
| 513/163985/A | 513/164271/A |
| 513/164271/B | 513/164341/A |
| 513/164341/B | 511/162945/A |
| 511/162945/B | 511/162945/C |
| 511/162896/A | 511/162944/A |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/165855/A | 513/165567/A |
| 513/165567/B | 513/165611/A |
| 513/161655/A | 513/161655/B |
| 513/160502/A | 513/161804/E |
| 513/161804/F | 513/161804/G |
| 513/165588/A | 513/165469/A |
| 513/165469/B | 513/165469/C |
| 513/165469/D | 513/165469/E |
| 513/165611/B | 513/165611/C |
| 513/165611/D | 513/161535/A |
| 513/161535/B | 513/161535/C |
| 513/138549/A | 513/138549/B |
| 513/161708/A | 513/164203/A |
| 513/164203/B | 513/164203/C |
| 513/164203/A | 513/165468/A |
| 513/165468/B | 513/165679/A |
| 513/165902/A | 513/163897/A |
| 513/163897/B | 513/164031/A |
| 513/161864/A | 513/161864/B |
| 513/165759/A | 513/147027/A |
| 513/160730/F | 513/160730/E |
| 513/160730/D | 513/160730/C |
| 513/160730/B | 513/160730/A |
| 513/160589/A | 513/158974/B |
| 513/158974/A | 513/158641/E |
| 513/158641/D | 513/158641/C |
| 513/158641/B | 513/158641/A |
| 513/157854/A | 513/164361/A |
| 513/164359/A | 513/164308/B |
| 513/164308/A | 513/161690/B |
| 513/161690/A | 513/161629/A |
| 513/161622/B | 513/161622/A |
| 513/161610/A | 513/165523/A |
| 513/165522/A | 513/160775/A |
| 513/160775/B | 513/163996/A |
| 513/163996/B | 513/165684/A |
| 513/152245/A | 513/165553/A |
| 513/165553/B | 513/165732/A |
| 513/165812/A | 513/166891/A |
| 513/165727/A | 513/165727/B |
| 513/155448/A | 513/155448/B |
| 513/155448/C | 513/155448/D |
| 513/164299/A | 513/164211/A |
| 513/164211/B | 513/164248/A |
| 513/164248/B | 513/164248/C |
| 513/164248/D | 513/164238/B |
| 513/164290/A | 513/164250/A |
| 513/164250/B | 513/164029/A |
| 513/164029/B | 513/165867/A |
| 513/165867/B | 513/165777/A |
| 513/165585/A | 513/165508/A |
| 513/165741/A | 513/165689/A |
| 513/155455/A | 513/163986/A |
| 513/166706/A | 513/160480/A |
| 513/160480/B | 513/160480/C |
| 513/166817/A | |

(தொடரும்)


## மில்லேனியத்தில் அகவை ஒன்று

Happy



BIRTHDAY

இணுவில் வட்டுவினியைச்சேர்ந்த வரதராஜா-சறோஜினிதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

### செல்வன் சசிதரன்

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (24-10-2000) செவ்வாய்க்கிழமை கோப்பாய் அம்மன் அருள் பெற்று கோப்பாயில் அவரது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

சசிதரனை அவரது அன்பு அப்பா, அம்மா, இணுவில் பொன்னப்பா பதியைச் சேர்ந்த அப்பப்பா, கனடாவில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா குடும்பம், வவுனியாவில் வசிக்கும் மாமா, மாமி குடும்பம், லண்டனில் வசிக்கும் சித்தப்பா, சித்தி குடும்பம், இணுவிலில் வசிக்கும் அம்மப்பாமார், அம்மம்மா, அத்தை குடும்பம், கோப்பாயில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, இடைக்காட்டில் வசிக்கும் பெரியமாமா, பெரியமாமி குடும்பம், கோப்பாயில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா குடும்பம், ஜேர்மனியில் வசிக்கும் சின்னமாமா, சின்னமாமி குடும்பத்தினர், ஜேர்மனியில் உள்ள குட்டிமாமா, கோப்பாயில் உள்ள சித்தி, செட்டித்தெருவில் வசிக்கும் பெரியப்பப்பா, பெரியப்பம்மா, வெள்ளவத்தையில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா மற்றும் அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும் வட்டுவினி பிள்ளையார் துணைகொண்டு கண்ணகி அம்மன் அருளோடு வட்டுவினி வைரவர் ஆசீர்வாதத்தோடு பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

பொன்னப்பா பதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

பொ. காசிப்பிள்ளை
(அப்பப்பா)

(C/13547)


## கைதிகள் சென்ற வாகனம் மீது சூடு

கொழும்பு,ஒக்.24

பந்தேகம நீதிமன்றிலிருந்து காலிச்சிறைச்சாலைக்கு கைதிகளை ஏற்றிச் சென்ற சிறைச்சாலை வாகனத்தைப்பின் தொடர்ந்து சென்ற இனந் தெரியாத நபர்கள் சிலர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கைதிகள் உட்பட ஆறு பேர் காயமடைந்தனர். (ஐ-8)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை

**தரம் 5 புலமைப்பரிசில் - 2000**

**செல்வன் க.மதனகாந் - 153 புள்ளிகள்**

**செல்வி யோ.நிஷாந்தினி - 143 புள்ளிகள்**

சித்தியடைந்த மேற்படி மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்

*அதிபர், ஆசிரியர்கள்,*
*பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.*

(79812)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### திருமதி பத்மாவதி செல்வநாயகம்

*திதி:23-10-2000 திங்கட்கிழமை*

எங்கள் கண்கண்ட தெய்வம் அன்புத் தாயார் அமரர் பத்மாவதி செல்வநாயகம் அவர்களை இழந்து நாங்கள் துயருற்று நின்றவேளை பலவகையிலும் எம்மை ஆறுதல் படுத்தி உதவிகள் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (24-10-2000) செவ்வாய்க்கிழமை அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளும் நடைபெறும்.

நன்றி!

**- குடும்பத்தினர்.**

*105/12, இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

(79811)


## மரண அறிவித்தல்கள்

### இராசா மகாலிங்கம்

(முன்னாள் உரிமையாளர் மகாலிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ் - ஏகலிய கொடை, லிங்கலிங்கம் டிறைப்பரி ஸ்ரோர்ஸ்-கொம்பனித்தெரு, சாப்ளாஸ் ரெக்ஸ்ரைல்ஸ் - யாழ்ப்பாணம்.)

ஊர்காவற்றுறை சுருவிலைப் பிறப்பிடமாகவும் வேலணை புளியங்கூடலை வசிப்பிடமாகவும் தற்போது 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்துவருமாகிய இராசா மகாலிங்கம் 22-10-2000 ஞாயிறு இரவு 9 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற குமாரசாமி, மீனாட்சி ஆகியோரின் அன்பு மருமகனும் வடிவாம்பிகையின் அன்புக் கணவரும் சிவகுமார் (லண்டன்), சிவசுதா(மாணவி,யாழ்.இந்துமகளிர் கல்லூரி), சிவரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தணிகாசலம்(நாரந்தனை), லலிதாம்பிகை(வெள்ளவத்தை), காலஞ்சென்றவர்களான செல்வராசா, ஈஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தயாநிதி, சபாநாதன், ராஜேஸ்வரி, கமலாம்பிகை, கங்கைவேணியன்(வேணி களஞ்சியம்,யாழ்.), சந்திரவதனி ஆகியோரின் மைத்துனரும் பாலச்சந்திரன் பிரசாத்(ஓய்வு பெற்ற இலிகிதர்,இலங்கை ரயில்வே திணைக்களம்), காலஞ்சென்ற கருணாநந்தன்(உரிமையாளர்,கமலா ரேடர்ஸ்,கிளிநொச்சி), செல்வராஜா (உரிமையாளர்,ஹேறாம் நிட்ஸ்,காலி) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24-10-2000) செவ்வாய் பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைகளுக்காகக் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
திருமதி ம.வடிவாம்பிகை (மனைவி)
லயன் கு.கங்கைவேணியன்(மைத்துனர்)
உரிமையாளர்,வேணி களஞ்சியம்
165, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

*108,பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(79815)

### திருமதி கருணானந்தன் அருள்வதி (B.A)

(ஆசிரியர்,யா/ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்)

ஏழாலை மத்தியைச் சேர்ந்த திருமதி கருணானந்தன் அருள்வதி(**B.A**) அவர்கள் நேற்று(23-10-2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வ.செல்லையா(முன்னாள் உரிமையாளர், அசோகா ஸ்ரோர்ஸ், திருமலை), காலஞ்சென்ற ருக்மணி ஆகியோரின் அன்பு மகளும் கருணானந்தனின் அன்பு மனைவியும் ரிதுஷனின் அன்புத் தாயாரும் கதிரவேலு, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகளும் சிவலோகநாதன்(பிரான்ஸ்), சிவலோகநாயகி, திருலோகநாயகி(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராதிகா(பிரான்ஸ்) ஜெயலிங்கம்(பிரியா ஸ்ரோர்ஸ், சுன்னாகம்), ஜெயந்தன்(சுவிஸ்), சிவரூபன்(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் வலிகாமம் தெற்கு உடுவில்) ஆகியோரின் மைத்துனியும் விவேக்(பிரான்ஸ்),பிரியதர்ஷினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு அத்தையும் பிரியா,கிரிஜா,துஷானி,ருக்சிகா(சுவிஸ்) ஆகியோரின் சிறிய தாயாரும் அனுஷன்,அனுஜா ஆகியோரின் அன்பு அண்ணியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று 23-10-2000 உசத்தியோடை இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**வ. செல்லையா (தந்தை)**
(முன்னாள் உரிமையாளர்
அசோகா ஸ்ரோர்ஸ் - திருமலை)
**கருணானந்தன்** (கணவன் - டோகா)
**சி.ஜெயலிங்கம்** (மைத்துனர்),
(பிரியா ஸ்ரோர்ஸ், சுன்னாகம்)

ஏழாலை மத்தி,
ஏழாலை.

(C/13553)

# இன்றைய கப்பல் சேவை ரத்து அடுத்த சேவை வியாழனன்று

யாழ்ப்பாணம்,ஒக்.24

திருகோணமலைக்கும் பருத்தித் துறைக்கும் இடையிலான 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் சேவையின் அடுத்த சேவை நாளை மறுதினம் வியாழக் கிழமையே இடம்பெறவுள்ளது என்று திருமலை பிரதேச செயலர் வி. வேலும்மயிலும் நேற்றிரவு தெரிவித் தார்.

திருகோணமலையில் நேற்று நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இன்றைய சேவை ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றும் -

நாளை புதன்கிழமை திருமலை யில் இருந்து புறப்படும் கப்பல் மறு நாள் வியாழக்கிழமை பருத்தித்து றையில் இருந்து திரும்பும் என்றும்- அவர் மேலும் தெரிவித்தார்.

அதேசமயம் - செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் நோயாளர் கப் பல் சேவை திருமலையில் இருந்து பருத்தித்துறைக்கு வழமைபோல் இன்று இடம்பெறும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (ஐ-3)

## நாகர் கோயிலில் உயிரிழந்த விடுதலைப்புலிகளின்

# 15 சடலங்கள் நேற்று கல்முனையில் கையளிப்பு!

யாழ்ப்பாணம்.ஒக்.24

கடந்த சனிக்கிழமை நாகர் கோயில் பகுதியில் உயிரிழந்து படையினரால் மீட்கப்பட்ட விடுத லைப் புலிகளின் 18 சடலங்களில் 15 நேற்றுப் பிற்பகல் யாழ். குடாக் கடலுக்கப்பால் பூநகரி கல்முனை யில் வைத்து செஞ்சிலுவைச் சர்வ தேசக்குழு அதிகாரிகளால் புலிக ளின் பிரதிநிதிகளிடம் ஒப்படைக் கப்பட்டன.

நாகர் கோயிலில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வந்த மோதல் சம்பவங்களின் போது உயிரிழந்ததாகத் தெரிவித்து 18விடு தலைப்புலிஉறுப்பினர்களின் சடலங் கள் கடந்த சனியன்றுபடையினரால் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்ப டைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இந்தச் சடலங்களில் நல்ல நிலையிலிருந்த பதினைந்தை பொறுப்பேற்ற செஞ்சிலுவை சர்வ தேசக்குழுவினர் அவற்றை குருந கரில் வைத்து இரு வள்ளங்களில் ஏற்றினர். பொலித்தீன் பைகளில் பொதி செய்யப்பட்டிருந்த அந்த சடலங்களை எடுத்துச்சென்ற செஞ் சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரி கள் அவற்றைக் கல்முனையில் வைத்து நேற்றுப் பிற்பகல் விடுத லைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் கையளித்தனர்.

சடலங்கள் கையளிப்பை ஒட்டி அந்தப் பகுதியில் தற்காலிக தாக்கு தல் தவிர்ப்பு நடைமுறைப்படுத்தப் பட்டிருந்ததாகத்தெரியவந்தது.

அடையாளம் காணமுடியாத வாறு உருக்குலைந்து காணப்பட்ட மூன்று சடலங்கள் யாழ். ஆஸ்பத் திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வழமையாகச் சடலங்கள் கைய ளிப்பு நீர்வேலித்தரவைப் பகுதியி லேயே இடம் பெற்று வந்தது.

மழை காரணமாக வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு சேறும் சகதியுமாக அந்தப் பகுதி காணப் படுவதால் சடலங்களைக் கையளிக் கும் இடம் மாற்றப்பட்டிருப் பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-5-10-15-51-139)

# அமைச்சரவையில் மேலும் இருவருக்கு இடம் கிடைக்கும்

## பிரதி அமைச்சர்கள் நாளை பதவியேற்பு

கொழும்பு,ஒக்.24

நாற்பத்து நான்கு பேருடன் கடந்த வியாழக்கிழமை பதவியேற்ற அமைச்சரவை மேலும் விஸ்தரிக் கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அந்தாஷ் செனவிரத்ன, டிலான் பெரேரா ஆகியோரையும் அமைச் சரவையில் சேர்க்கும் பொருட்டு அமைச்சரவை விஸ்தரிக்கப்பட விருப்பதாக அரச தரப்பு வட்டாரங் கள் தெரிவித்தன.

அதே வேளை-

பிரதி அமைச்சர்களான 46 பேர் நாளை பதவியேற்க இருக்கின்றனர். தேசிய ஐக்கிய முன்னணிக்கு ஐந்து பிரதி அமைச்சர் பதவிகளும், ஈ.பி.டி.பி.க்கு இரு பிரதி அமைச்சர் பதவி களும் வழங்கப்படவிருக்கின்றன.

(ஐ-3)

SALE! SALE!!
இதோ! முந்துங்கள்
உள்ளம் துள்ளும் தீபாவளிப் பரிசு!
மகாநதி வழங்கும்
மாபெரும் சிறப்புத் தள்ளுபடி
இத்தள்ளுபடி 26-10-2000 வரை மட்டுமே!
நதிகளின் சங்கமம் கடலில்
சகலவித புடைவைகளின் சங்கமம்
மகாநதியில்
புதிது புதிதாய்ப் பூத்திருக்கும் தீபாவளிப்
புடைவைகளுக்கு .....!
மகாநதி
புடைவை . அகம்
முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான
நிறுவனம்
16,நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
சாறி பிளவுஸ், பீஸ் துணிவகைகளுக்கு பிரத்தியேக
காட்சி அறை
16,நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம். (C/13539)

# 3 ஆணைக்குழுக்களை அமைக்க அரசுக்கு ஐ.தே.க. காலக்கெடு

## வெளியில் இருந்து ஆதரவு வழங்க முடிவு

சுதந்திர தேர்தல் ஆணைக்குழு, சுதந்திர பொலீஸ் ஆணைக்குழு, சுதந்திர அரசசேவை ஆணைக்குழு ஆகியவற்றை அமைப்பதற்கு வசதி யாக அரசுக்கு வெளியில் அருந்து ஆதரவு வழங்குவது என்றும்-

இந்த ஆணைக்குழுக்களை அமைக்க எதிர்வரும் டிசெம்பர்மாதம் 31ஆம் திகதி வரை அரசாங்கத்துக் குக் காலக்கெடு வழங்குவது என் றும் -

ஐ.தே.கட்சியின் செயற்குழு நேற்று முடிவு செய்துள்ளது.

கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்க தலைமையில் நடை பெற்ற இந்தக் கூட்டத்தில் அர சுக்கு ஆதரவு வழங்குவது தொடர் பாகவும் தேசிய அரசு அமைப்பது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட் டது.

மூன்று ஆணைக்குழுக்களையும் அமைப்பதற்கு பொது வேலைத் திட்டத்தின் கீழ் அரசுக்கு ஆதரவு வழங்குவது என்றும் -

வழங்கப்பட்ட காலக்கெடுவுக் குள் அரசு அதைநிறைவேற்றாவிட் டால் எனைய கட்சிகளுடன் இணைந்து அரசைக் கவிழ்க்க நடவ டிக்கை எடுப்பது என்றும் -

கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது.

தேசிய அரசு ஒன்றை நிறுவுவ தற்கு ஒத்துழைப்பு வழங்குவது குறித்து கூட்டத்தில் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும்-

தேசிய அரசு அமைப்பது தொடர் பாக பௌத்த பீடாதிபதிகள் கோரிக்கை விடுத்துள்ள போதும், அது குறித்து கூட்டத்தில் முக்கியத் துவம் அளிக்கப்படவில்லை என்றும்-

ஐ.தே.கட்சி பிரமுகர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை-

கட்சியின் பிரதித் தலைவராக கரு ஜெயசூரியாவை நியமிப்பது என்றும் நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(ஐ-3)

## உடல் நலம்பெற பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,ஒக்.24

பிரபல சிற்பாசாரியார் ஆறுமுகம் ஜீவரட்ணம் நோயுற்ற நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு ள்ளார்.

இவரின் உடல் நலம்பெற வேண்டி அவரது அபிமானிகளும் மற்றும் ஆலய தர்மகர்த்தாக்களும் ஆலயங்களில் விசேட வழிபாடுகள், பிரார்த்தனைகள் செய்துவருகின் றனர். (ஐ-7)

### நிமாலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்ட கலந்துரையாடலில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

சகல மொழிப் பத்திரிகையாளர் கள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

நாளை நண்பகல் முதல் மாலை வரை பல இடங்களில் இருந்தும் பேர ணிகள் புறப்பட்டு கோட்டை ரயில் நிலையம் முன் கூடி அங்கு ஆர்ப் பாட்டம் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3)

### மாபிள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப் பிரிவினர் அங்கு புலிகளுடன் மோதியதாகவும் -

அங்கு இடம்பெற்ற மோதலில் படையினர் தரப்பில் இருவர் உயிரி ழந்தும் 11 பேர் காயமடைந்தும் உள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது. பொதுமக் கள் தரப்பில் மூவரும் இச்சம்பவத் தில் காயமடைந்தனர்.

மாபிள் கடற்கரைப்பகுதியில் சிறு புதர்க்காடுகள் அடங்கிய நான்கு மைல் சுற்றாடல் பகுதியை படையி னர் சுற்றிவளைத்துள்ளதாகவும் -

அப்பகுதி மீது படையினர் பலத்த மோட்டார் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் - ஒரு தகவல் தெரி வித்தது. (ஐ-3-7-8)

தேவை
யாழ்.நகரில் இயங்கும் பிரபல்யமான கணனி நிறு வனம் ஒன்றிற்கு கணனித் துறையில் Type Setting அனுபவமுள்ள பெண் தேவை. மூன்று மாத கால மேலதிக பயிற்சி வழங்கப் படும். 25.10.2000 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.
குறிப்பு:-
செய்முறைப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.
தொடர்புகளுக்கு:-
விள.இல. 1120
மே/பா உதயன்.

# சிறைகளில் உள்ள தமிழ் இளைஞர்கள் வருட இறுதிக்குள் விடுதலையாவர்

## புதிய நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.24

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகிய வற்றின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைகள் எதுவுமின்றி நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட் டுள்ள தமிழ் இளைஞர்கள், யுவதி களை விடுதலை செய்ய நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அனேகமாக இந்தவருட இறு திக்குள் இவர்கள் விடுதலை செய் யப்படுவர் என்று புதிய நீதி அமைச் சராகப் பதவியேற்றிருக்கும் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நீதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தென் இலங்கைச் சிறைச்சாலை களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்களுக்கு எதிராக இன்னும் சில தினங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

இது தொடர்பாக சட்டமா அதி பருக்கும் அறிவிக்கப்பட்டு வழக்குக ளைத் துரிதப்படுத்துமாறும் கேட்கப் பட்டுள்ளது.

இந்த விசாரணைகளின் முடிவில் குற்றமற்றவர்கள் வடுதலை செய்யப் படுவர் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஹெரோயின் சிக்கியது

மொஸ்கோவில் இருந்து நேற்றுக் காலை கொழும்புக்கு வந்த பாக் கிஸ்தானிய தம்பதியினரிடமிருந்து அறுபது லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் மற்றும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இருநூறு ஆபாச வீடியோக் கசட்டுகள் என்பவற்றை சுங்கப் பகுதியினர் கைப்பற்றியுள் ளனர். ஆவணங்கள் கொண்டு செல் லும் பெட்டியிலும், பயணப் பொதிக ளிலும் இந்தச்சட்டவிரோதப் பொருள் கள் பதுக்கிவைக்கப்பட்டிருந்ததாக சுங்கப்பகுதியினர் தெரிவித்தனர்.

### யாழ்.நகர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னம் தெரிவித்து ஒருநாள் எதிர்ப்பு இயக்கம் நடத்துவதற்கு வடஇலங் கைப் பத்திரிகையாளர் சங்கம் விடுத்துள்ள அழைப்பை, நிமலராஜ னுடன் சேர்ந்து அதே புனித பத் திரிகைப்பணியை முன்னெடுத்திருக் கும் இந்த மண்ணின் குரலான 'உத யன்' முழு ஆவலோடு வரவேற்கின் றான்.

அந்த எதிர்ப்பு இயக்கத்துக்கு தன்னால் இயன்ற ஒத்துழைப்பு அனைத்தையும் 'உதயன்' முழு அளவில் வழங்குவான் என உறுதி கூறுகின்றோம்.ஆனால் புனிதப்பணி மேற்கொண்ட ஒரு பத்திரிகையாள னின் குரலை அடக்குவதற்காக அவனை படுகொலை செய்த ஜனநா யகம் புரியாத - ஆயுதம்தாங்கிய கும் பலுக்கு நமது எதிர்ப்பை வெளிப் படுத்தும் பொருட்டும் வட இலங் கைப்பத்திரிகையாளர் சங்கத்தினர் விரும்பும் வகையில் பேரணிக்கு அடுத்த நாள் பத்திரிகையை மூடி அடங்கிப்போய் ஒதுங்கிநிற்பது சரி யான வழியாகாது எனக் கருதுகின் றோம்.அத்தகைய வழியை நாடுவது துணிச்சல் மிக்க நிமலராஜனின் வழிக்கு இயைந்ததும் அல்ல என் பதே எமது கருத்து.

எனவே எதிர்ப்பு இயக்கம் நடக் கும் தினத்தன்றும் அதற்கு அடுத்த நாளும் அந்த எதிர்ப்பு இயக்கம் பற் றிய தகவலை சர்வதேச உலகுக்கு ஒலித்து,கோழைத்தனமாகக் கொலை புரிந்த கும்பலின் முழு உருவத்தை யும் அம்பலப்படுத்தும் வகையில் முழு மூச்சுடன் முரசறைவதே முறை யானது என'உதயன்' கருதுகின்றான்.

எதிர்ப்பு இயக்க தினத்தில் அது தொடர்பான நிகழ்ச்சிகளில் 'உத யன்' ஊழியர்கள் முழு ஈடுபாட்டுடன் பங்குகொள்வதோடு, அதற்காக மேல திக நேரம் கடமை புரிந்து அடுத்த நாளும் 'உதயனை' வெளியிடுவ தோடு அன்றைய தினத்தில் தாம் பெறும் ஒரு நாள் ஊதியத்தை பத் திரிகையாளன் நிமலராஜனின குடும்ப நலன் காக்கும் உதவி நிதிக்கு வழங் கவும் திடசங்கற்பம் பூண்டுள்ளனர் என்பதை ஊழியர்கள் சார்பில் அறி யத்தருகின்றோம்.

- நிர்வாகத்தினர் -

### திருமலைக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச்சம்பவம் தொடர்பாக விசேட ஊடகத்தகவல் நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது:-

நேற்று அதிகாலை 4 மணிய ளவில் புல்மோட்டைப்பகுதியில் விடு தலைப்புலிகளின் படகுகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் இடையில் கடும்சண்டை இடம் பெற் றது.இதன்போது விடுதலைப்புலிக ளின் படகு ஒன்று அழிக்கப்பட்டது.

அதன்பின்னர் அதிகாலை 6 மணியளவில் கடற்படைத்தளம் மீது விடுதலைப்புலிகள் மோட்டார் தாக் குதல்களை ஆரம்பித்தனர். அதே சமயம் விடுதலைப்புலிகளின் நான்கு வள்ளங்கள் திருகோணமலைத் துறைமுகத்துக்குள் ஊடுருவ முயன் றன. அதனையடுத்து கடற்படையி னர் மேற்கொண்ட தாக்குதலில் அவற்றில் மூன்று படகுகள் அழிக் கப்பட்டன.

வெடிமருந்துநிரப்பப்பட்ட நான்கா வது படகு கடற்படை இறங்குது றைக்கு அருகில் வெடித்தது. இதன் காரணமாக ஏற்கனவே பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பி துறைமு கப் பகுதியில் நங்கூரமிட்டிருந்த அதி வேக துருப்புக்காவி கப்பல் பலத்த சேதத்துக்குள்ளானது. அத்துடன் அதிவேக பீரங்கிப்படகு ஒன்றும் சிறு சேதம் அடைந்தது.

கடற்படையினருக்கும் விடுத லைப்புலிகளுக்கும் இடையில் அப் பகுதியில் பல மணிநேரம் பலத்த சண்டை இடம்பெற்றது.

பவுல் முனைப்பகுதியில் தரித்து நின்ற கடற்படைப் பீரங்கிப்படகு ஒன்று திருமலைத்துறைமுகத்துக் குள் ஊடுருவ முனைந்த புலிகளின் மற்றொரு படகைத் தாக்கி அழித் தது.

இந்தத் தாக்குதலின் போதுஇரு கடற்படையினர் கொல்லப்பட்டனர்; மூன்று கடற்படையினர் பலத்த காயங்களுக்குள்ளாகினர் மற்றும் 40 பேர் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

இப்படி விசேட ஊடக நிலையத் தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஆயினும் -

கரும்புலிகளின் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்கான துருப் புக்காவி கப்பல் மூழ்கடிக்கப்பட் டதாக "றொய்ட்டர்" செய்தி நிறுவ னம் தெரிவித்தது.

கடற்படைக் கப்பல் மீது புலிக ளின் படகு அணிதாக்குதல்நடத்திய அதேவேளை திருமலை மாபிள் கடற்கரைப்பக்கமாக இருந்து கடற் படைத்தளம் மீது புலிகள் பலத்த பீரங்கித் தாக்குதல்களை மேற் கொண்டதாகவும் றொய்ட்டர் தெரி வித்தது. (ஐ-3-7-8)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி', 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.